Registered as a Newspaper … 06 விலை ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 23 (7.03.94) திங்கட்கிழமை ஓசை 17

## வாடிக்கையாளருக்கு ஆலோசனை; வங்கி வாடிக்கையாளர் சங்கம் முடிவு

யாழ். வங்கி வாடிக்கையாளர் சங்கம் விரைவில் வாடிக்கையாளர்களுக்கு வங்கிகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனை வழங்கவிருக்கிறது. இதற்கென தமக்கு ஓர் அலுவலகம் ஒன்றை அமைத்து அதில் வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனைச் சேவையை வழங்கவுள்ளது. வங்கிகளுடன் தொடர்பு கொள்ளவரும் வாடிக்கையாளர்கள் தமது அறியாமை காரணமாக படிவங்களை நிரப்புதல் போன்ற செயற்பாடுகளில் தவறிழைக்கின்றனர். இதனால் இக் கணக்குகளை கையாள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சில வாடிக்கையாளர் பெருந்தொகைப் பணத்தை வங்கியிலிட்டு (6ஆம் பக்கம் பார்க்க)

# கனடாவின் மத்தியஸ்த முயற்சி ஜனாதிபதி டி.பி.யால் நிராகரிப்பு

## இனப்பிரச்சினை உள்நாட்டு விவகாரமாம்

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு வெளிநாட்டு மத்தியஸ்தம் ஏதும் தேவையில்லை என சிறிலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு பிரச்சினையில் சில கனேடிய அமைப்புகளும் கனேடிய பாராளுமன்றக் குழுவும் மத்தியஸ்தம் செய்ய விரும்புகின்றன என அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்கையிலேயே டி. பி. விஜேதுங்கா இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து அமைச்சர் தொண்டமானுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்பவும் கனடா நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் பிரமுகர்களின் சார்பிலும், கனடாவில் இலங்கை அகதிகளுக்கான இணைப்பதிகாரியும், வக்கீலுமான மாக்ஸ் பேக்கர் இத்திட்டத்தை அமைச்சர் தொண்டமானுக்கு அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இது குறித்து மேலும் டி. பி. விஜேதுங்கா தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு பிரச்சினை இந்நாட்டின் உள்விவகாரம் இலங்கையில் உள்ள சகல அரசியல் கட்சிகளும் பங்குபற்றும் பேச்சுவார்த்தை ஒன்றின் வழிமுறை மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படல் வேண்டும். இனப்பிரச்சினையில் கனேடியர் போன்ற வெளிநாட்டு மத்தியஸ்தர்கள் எவ்வித பயன்மிக்க பாத்திரத்தையும் வகிக்க முடியாது. கனேடிய அமைப்புகளும் தனிநபர்களும் பாராளுமன்றக் குழுவும் எந்தவித தீய நோக்கமும் இன்றி தெரிவித்த அபிப்பிராயங்களை அரசுக்கும் தொண்டமானுக்கும் பிரச்சினைகளை தரும் விதத்தில் செய்திப் பத்திரிகைகள் திரிபுபடுத்தியதையிட்டு நான் கவலையடைகிறேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினைகள் தொடர்பாக எவ்வித மத்தியஸ்த நடவடிக்கையிலும் சிறிலங்கா அரசு அக்கறை காட்டவில்லை என அந்த கனேடிய அமைப்புகளுக்கும் பாராளுமன்றக் குழுவிற்கும் தனிநபர்களுக்கும் தெரிவித்துவிடுமாறு தொண்டமானை ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார். வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வுகாண கனடாவிற்கு விஜயம் செய்வதன்மூலம் எந்தவிதப்பயனும் ஏற்படப்போவதில்லை என தொண்டமானுக்கு ஜனாதிபதி எடுத்துக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு பிரச்சினையில் கனடா மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பாக ஆராய அமைச்சர் தொண்டமானை கனேடிய அமைப்புகள் சிலவும் கனேடிய பாராளுமன்றக் குழுவும் பிரமுகர்களும் அழைத்திருந்தமை தெரிந்ததே.

## லெப். மயூரனுக்கு இன்று நினைவுக்கல் நாட்டல்

01.03.94 அன்று கௌதாரிமுனையில் சிறிலங்கா இராணுவ நடமாட்டத்தை அவதானிக்கச் சென்றவேளை ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட எட்டு வீரவேங்கைகளில் லெப். மயூரன் (சண்முகராஜா செந்தில்ராஜ், 63, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி) அவர்களின் திருவுருவப்படம் அவரது இல்லத்திலிருந்து இன்று பி.ப.2.00 மணியளவில் கொழும்புத்துறை சனசமூக நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மக்கள் அஞ்சலியினைத் தொடர்ந்து நடைபெறும் இறுதி வீரவணக்கக் கூட்டம் நிறைவுற அங்கிருந்து பி.ப. 3.00 மணிக்கு அணி (6ஆம் பக்கம் பார்க்க)

## மின் பற்றாக்குறை நிவர்த்திசெய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனா வைத்தியசாலையில் அண்மைக் காலமாக நிலவி வந்த மின்சாரப் பிரச்சினை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 200 கிலோவாற் மின்பிறப்பாக்கியும் இம் முறை இங்கு கப்பலில் எடுத்து வரப்படும் இடத்து இப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு விட முடியும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் மின்சாரப்பற்றாக்குறையினால் தற்சமயம் தடைப்பட்டுள்ள சில சேவைகள் மீண்டும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா) (தி)

## சிறப்பு வைத்தியர்கள் புலம்பெயர்வு வடபகுதி நோயாளர் அவதி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியைச் சேர்ந்த சிறப்பு வைத்தியர்கள் தென்பகுதிக்கும் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றிருப்பதால் வடபகுதி நோயாளர்கள் சிறப்பான வைத்திய தேவையைப் பெறமுடியாமல் அவலப்படுகின்றனர் என்று யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

வடபகுதியில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் சில நோய்களினால் கடுமையாகப் பாதிப்படைந்துள்ள தமிழ் நோயாளர்கள் பல சிரமத்தின் மத்தியில் தென்பகுதிக்கு சிகிச்சை பெறச் செல்ல வேண்டியுள்ளது. ஆனால், இங்குள்ள தமிழ் சிறப்பு வைத்தியர்கள் கொழும்பிலும் தென்பகுதியின் வேறு இடங்களிலும் வைத்திய சேவையில் (6ஆம் பக்கம் பார்க்க)

## 100 சிங்கள, தமிழ் இளைஞர் நேற்று விடுதலை

## வயிற்றோட்டத்தால் மரணம்

(தென்மராட்சி)

வயிற்றோட்ட நோயினால் குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

பண்டிதர் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் செ. மாசிலாமணி என்பவர் கடந்த 8-ம் திகதி அன்று சாவகச்சேரி மருத்துவமனையில் இருந்து யாழ் மருத்துவமனைக்கு கொண்டுசென்று அங்கு மரணமானார். (86)

## சுமண படை நடவடிக்கை புலிகளுக்குப் பாதிப்பில்லை - குணம்

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையில் படையினர் மேற்கொண்ட வேலுசுமண இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாக நடத்தப்பட்டது என அரசு பிரசாரம் செய்தளவு வெற்றிகரமானதல்ல. இதனால் விடுதலைப்புலிகளுக்கு எந்தவித மான பாதிப்பும் இல்லையென விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட விசேட தளபதி குணம் புலிகளின் குரல்

யொட்டி படையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். இதில் புலிகளின் நிலை ஒன்று அழிக்கப்பட்டதாக அரசு கூறியது. ஆனால், இதனால் புலிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. பல படையினரே புலிகளின் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தனர்.

அப்பாவித் தமிழரை படை

ஒன்றின் வழிமுறை மூலமே லும் சிறிலங்கா அரசு அக் டமான கவேடிய அமைப்

பதி குணம் புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

திருமலையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலை

அப்பாவித் தமிழரை படையினர் முகாமிற்கு பிடித்துச் சென்றனர். திரியாய், கும்புறுப்பிட்டி, குச்சவெளி பகுதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று விடுதலை

(கொழும்பு)

அரசினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 100 இளைஞர்கள் நேற்றுக்காலை தடுப்புமுகாம்களிலிருந்து விடுதலைசெய்யப்பட்டனர். இவர்களில் 71பேர் சிங்களவர், 29 பேர் தமிழர்கள். இந் நிகழ்வில் புனர்வாழ்வு ஆளுநர் நாயகம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவும் கலந்துகொண்டார்.

## கடல்வலயத் தடை முழுமையாக நீக்கப்படும்

(கொழும்பு)

வடபகுதி கடல்வலய தடையை அகற்றுவது தொடர்பாக அரசு செயற்பட்டு வருவதாகவும் புனர்வாழ்வு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, மீன்பிடி கடல்வள அமைச்சு ஆகியன கூட்டாக இது குறித்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடல் வலயத்தடை விரைவில் முழுமையாக நீக்கப்படும் என புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரட்ன தெரிவித்துள்ளார்.

# வடபகுதி மீது விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கை

## சிரேஷ்ட அதிகாரி தகவல்

(கொழும்பு)

பல இராணுவ அணிகளை பயன்படுத்தி விரைவில் வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கப் போவதாகவும் இதற்கான முழுமையான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் 'ஞாயிறு லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இவ் இராணுவ நடவடிக்கைக்கு புதிதாக உருவாக்கப்பட்ட பத்து படை அணிகள் முழுமையாக பயன்படுத்தப்படும் என்றும், கிழக்கு மாகாணத்தையும் வவுனியா நகரப் பகுதியையும் சேர்ந்த இராணுவத்தினர் இந்நடவடிக்கைக்குப் பயன்படுத்த இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ் இராணுவ நடவடிக்கையின் இலக்கு தொடர்பாக கருத்து தெரிவிக்க மறுத்த அச் சிரேஷ்ட இராணுவ அதிகாரி பல பகுதிகளிலும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரிவித்தார்.

## மகாவலித் திட்டப் பணம் இராணுவ செலவீட்டிற்கு!

### பி. பி. ஸி தெரிவிக்கிறது

மகாவலித் திட்டத்தில் உள்ள வெலிஓயாக் குடியேற்றத் திட்டத்துக்கு என ஒதுக்கப்பட்ட நிதி அவ்விடத்தில் இராணுவச் செலவினங்களுக்குப் பாவிக்கப்பட்டது இப்போது தெரியவந்துள்ளது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையே, புலிகளின் தாக்குதலைத் தடுப்பதற்காக வெலிஓயா ஒரு காவல் பகுதியாக இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு இப்போது குற்றம் சாட்டப்படுகிறது.

இதேவேளை மகாவலித் திட்டத்தின் அமைச்சராக இருந்த காமினி திஸாநாயக்கா இக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

மண்டைதீவு கடற்பரப்பில்

# மீனவர் மீதான எறிகணைவீச்சு; ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு பண்ணைக் கடற்பரப்பின் யாழ்நகர்கடற்கரைப்பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களைநோக்கி மண்டைதீவு இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார், மற்றும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் சுமார் 11-30 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தின் போது கொட்டடியைச் சேர்ந்த தர்மலிங்கம் ராசகிளி (17வயது) என்பவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். இவருடன் கூடச்சென்ற அதேஇடத்தைச்சேர்ந்த நவரெட்னம் ரஞ்சன் (16வயது), என்பவரும் மற்றும் திருநெல்வேலியைச்சேர்ந்த சலமன் சோமசுந்தரம் (30 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவரின் உடல் நேற்று யாழ் போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது

இச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது. இறந்தவரும் அவருடன் கூடச்சென்றவரும் பண்ணை சங்கிலிப் பாலத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலிவடக்கு பகுதி மீது கடும் எறிகணைத் தாக்கு

(வடமராட்சி)

வலிகாமம் வடக்கு மற்றும் தொண்டமானாறு குடியிருப்புகள் மீது நேற்று முன்தினம் இரவு இரண்டு முனைகளில் இருந்து கடும் குண்டு வீச்சுச் சம்பவங்கள் இடம் பெற்றன.

வலிகாமம் வடக்கு மீது பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும், வல்வெட்டித்துறை கடற்பரப்பில் இருந்து தொண்டமனாறு குடியிருப்புகள் மீதும் பலத்த ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பலாலி இராணுவ முகாமிலிருந்து இரவு 9.15 மணியளவில் வலிகாமம் வடக்குப் பகுதிகள் மீது ஆட்லறி ஷெல் குண்டுகள் வீசப்பட்டன. இரவு 12.00 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் இருந்து சிறிலங்கா கடற்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆயர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் அதி: வண. இராயப்பு யோசப் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மேய்ப்புபணி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே இவர் யாழ்ப்பாணம் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி, க)

## மட்டு. மேயராக செழியன்

(கொழும்பு)

மட்டக்களப்புமாநகரசபை மேயராக ஆசக்கூடிய ஆசனங்களைப்பெற்ற சுயேட்சை குழுத்தலைவர் செழியன் ஜெபேரின்பநாயகம் விரைவில் பதவி ஏற்கவுள்ளார்.

# நேர்மையான உண்மையான தீர்வு; புலிகளின் விருப்பம் அதுவே!

### சர்வோதய தலைவர் ஆரியரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கான எனது பயணம் உண்மையில் மிகவும் பிரயோசனம் தரக்கூடியதாக அமைந்தது என சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஏ. டி. ஆரியரட்ண தெரிவித்தார்.

லண்டன் பி. பி. ஸியின் சிங்கள சேவையான சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்த அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் பல தரப்பினரையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது இவர்கள் உண்மையில சமாதானத்தை விரும்புகின்றனர்.

விடுதலைப்புலிகளின் உறுப்பினரான கரிகாலனைச் சந்திக்கமுடிந்தது. அவருடன் பேசும்போதும் என்னால் அவதானிக்க முடிந்தது என்னவென்றால் அவர்களும் சமாதானத்தை விரும்புகின்றார்கள் என்பதாகும்.

அவர்கள் நல்ல ஓர் அடிப்படையான தீர்வுமூலமான சமாதானத்தை விரும்புகின்றமை திரு. கரிகாலனுடன் நடந்த பேச்சுக்களில் இருந்து தெளி

(6ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கு தேர்தல் மோசடிகள்

## முஸ்லிம் நாடுகளுக்கும் உலகிற்கும் அறிவிப்போம்

### அஷ்ரப் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றை தயாரித்து முஸ்லிம் நாடுகளுக்கும், உதவி வழங்கும் நாடுகள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கும் அனுப்பவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து ஜனநாயகத்தை ஆயுத முனையில் குழிதோண்டிப் புதைக்க முயற்சிகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விரைவில்**

**பாலரகிரிவராக!**

தகைமை ஜி.வி.ச.(O.L)சனி ஞாயிறு நேரில் எதிர முடியாதோர் தபால் வழியிலும் பயிற்சி பெறலாம். பானர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். (7670)

**L D வான் BMC லோறி CHASSIS**

L. D வான், BMC லொறி எல்பனவற்றின் அடிச்சட்டம் விற்பனைக்கு உண்டு "மிக்க வெற்" (தி-8780)

**அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை**

அகில உலகரீதியில் நடாத்தப்பட்ட வானொலி நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்றவர்; அவரது நாடகங்களை பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன: பலர் நடிக்கின்றனர்.
1. 'கெட்டிக்காரர்கள்'
2. 'முதலாம்பிள்ளை' 50/-
(7606)

# தென்மாகாண தேர்தல் இருகட்சிகள் பந்தயம்

(கொழும்பு)

தென்மாகாண சபையின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் போது அம்பலாங்கொடை நகரசபையில் உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இழக்கவுள்ளார்.

இரு வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த இருவர் தத்தமது கட்சிதான் மேற்படி தேர்தலில் வெற்றி பெறும் என்று பரஸ்பரம் பந்தயம் பிடித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான ஜே.எச்.எம். பெரேராவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த கே.எம்.ஹேமசிறியுமே இவ்வாறு பந்தயம் பிடித்துள்ளனர்.

எதிர்வரும் 24ஆம் திகதி மேற்படி தேர்தல் நடைபெற இருக்கிறது.

இத்தேர்தல் வெற்றி தொடர்பாக இவ் இருவரும் செய்து கொண்ட பந்தயங்கள் குறித்த எழுத்து மூலமான ஒப்பந்தப்பத்திரம் ஒன்று பிரதி நகரசபைத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# முன்னாள் மேயர் வழக்கில் முன்னாள்ஜனாதிபதி சாட்சி

(கொழும்பு)

கொழும்பு மாநகர முன்னாள் மேயர் இரத்னசிறி ராஜபக்ஷவுக்கு எதிராக மேல்மாகாணசபை சுமத்திய ஐந்து குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணையில் சாட்சிகளாக முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, முன்னாள் மேல்மாகாண சபை முதலமைச்சர் சுசில் முனசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

ஜே. ஆர் ஜெயவர்த்தனா தமது சாட்சியத்தில் கிராம எழுச்சித் திட்டம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டது. இந்த கிராமஎழுச்சி கொண்டாட்டங்களில் கொழும்பு மாநகர சபையும் பங்கு பற்றியது. இதற்கு மாநகரசபை செலவிடும் பணம் பின்னர் அரசினால் திருப்பி கொடுக்கப்பட்டது என்றார்.

# எமது மண்ணிலேயே இறப்பதை விரும்புகிறேன்

## சிகிச்சை பெற்று திரும்பிய பெண்

(வடமராட்சி)

வாழ்ந்தாலும் எனது மண்ணிலே வாழ்வேன். இறந்தாலும் எனது மண்ணிலே இறப்பேன்; அந்நியர்கள் மண்ணில் இருந்து வாழ்வதைவிட எமது மண்ணில் இறப்பது மேல்.

இவ்வாறு கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திரும்பி வந்த குடும்பப் பெண் திருமதி சர்வாம்பிகை இராசநாயகம் (வயது 43) என்பவர் பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து இன்று வடமராட்சி செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் நான் தெல்லிப்பழையில் இருந்து இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து வட்டுக்கோட்டையில் தங்கி வந்தேன். கடந்த வருடம் யூன் 30ஆம் திகதி வட்டுக்கோட்டை சாவடிப் பகுதியில் "சுப்பர் சொனிக்" விமானம் ... சாலையில் உள்ள தமிழ் வைத்திய அதிகாரிகள் எங்கள் மீது அன்பு வைத்து கடமையைச் செய்கின்றனர்.

எனது அருகில் சிகிச்சை பெற்று வந்த சிங்கள இனநோயாளிகளுக்கு விமானக் குண்டினால் எனது கால்சேதமடைந்தது என்று கூறும் போது அவர்களுக்கு பெரும் ஆச்சரியம் உண்டாகிறது. மக்கள் மீதும் குண்டுகளைப் போடுகிறார்களா என வியப்பாக கேட்கின்றனர்; இங்கு நடக்கின்ற உண்மைச் சம்பவம் அவர்களுக்கு இன்னமும் தெரியவில்லை.

கொழும்பு வைத்தியசாலையில் உள்ள வைத்திய சேவையைவிட யாழ். வைத்தியசாலைச் சேவையை நான் நன்கு மதிக்கின்றேன்; நான் இங்கேயே இருந்து இந்த மண்ணிலே வாழ்ந்து இறக்கவே விரும்புகிறேன் என்றார்.

(வே)

# சமூகத்தை அடக்குமுறைபடின் அழிவுக்கே வழிகோலும்

## சபாநாயகர் முகம்மது தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு சமூகம் மற்றுமொரு சமூகத்தின் மீது ஆட்சி செய்ய முயற்சி செய்தால் அது அழிவுக்கே வழிவகுக்கும். இவ்வாறு சபாநாயகர் எம். எச். ... உரையாற்றிய சபாநாயகர் தமதுரையில் மேலும் குறிப்பிடுகையில்,

தெற்கிலுள்ள நாம் இறையுக்கியத்துமமற்ற விடயங்களை தேவையின்றிப் ...

---

யாழ். மறைமாவட்ட

# கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப் பணி மகாநாடு

**26) சிறப்பு விருந்தினர் என்று யார் வருகிறார்கள் என்று சொல்ல முடியுமா?**

எமது முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள், தென்இந்திய திருச்சபை, மெதடிஸ் திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை பிரதிநிதிகள் ஆயர்களான ஜெபநேசன் ஆண்டகை, அம்பலவாணர் ஆண்டகை ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

**27) யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்து யாரும் வருகிறார்களா?**

போக்கு வரத்து நிலைமைகள் கடினம் என்றபடியால் நிச்சயமாக யார் வருகிறார்கள் என்று சொல்வது கடினம். எமது சகோதர மறைமாவட்டமான மன்னார் மறைமாவட்ட ஆயர் யோசவ் ஆண்டகை அவர்களும், மற்ற மறை மாவட்ட பிரதிநிதிகளும் வருவார்கள்.

**28 இந்த மகாநாட்டு நாட்களில் என்ன நடக்கும் என்ற ஒரு கேள்வியை நாம் கேட்கலாமா?**

கேட்கலாம். முதல் நாள் அர்ச்சனாரார்ப்பண வைபவம் நடைபெறும் நிரந்தரப் பிரதிநிதிகள் தம்மைப் பதிவு செய்த பின் 3 30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் கூட்டுத்திருப்பலிஒப்புக்கொடுக்கப்படும்

5 மணிக்கு ஒன்று கூடல், அறிமுகம் செய்தல் ஆகியவற்றுடன் முதலாவது அமர்வு இடம்பெறும்.

ஒவ்வொரு நாள் நிகழ்வுகளும் 7 30 மணிக்கு நாம் பிரதிநிதிகள் தம்மைப்பதிவு செய்வதோடும், செபவழிபாட்டோடும் ஆரம்பமாகும்;

மாலை 7.00 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தில் பங்குத்தயாரிப்பு நாடகங்கள், திருமறைக் கலாமன்றத் தயாரிப்பு "புதுப்புனல்" நிகழ்வுகள் என்பவற்றுடன் முடிவடையும்.

அமர்வுகள் நாளுக்கு 5 என்ற வகையில் இடம் பெறும்;

**29) அமர்வுகளில் என்ன நடக்க இருக்கிறது.**

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிலைப்பாட்டு ஏடுகள் வாசிக்கப் பெற்று, அபிப்பிராயங்கள் பெறப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டிய இடங்களில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

**(30) வாக்கெடுப்பின் மூலம் இந்த விடயங்களிலும் முடிவுகள் எடுக்கப்படலாமா?**

மிகவும் குறுகிய காலத்தில் உச்சபயனைப் பெறுவதற்கும், வீண் நேரவிரயங்களை தவிர்ப்பதற்காகவுமே ஒரு உயர் மட்டக் குழுவினர் ஒன்றாக அமர்ந்து இந்த நிலைப்பாட்டு ஏடுகளை தயாரித்துள்ளனர். முடிவுகள் எடுக்கப்படவேண்டிய நேரத்தில் ஜனநாயக முறையில்வாக்கெடுப்பு நடத்தி முடிவுகள் எடுக்கப்படும்

**(31) நிலைப்பாட்டு ஏடுகளில் உள்ள விடயங்கள் என்ன என்பது இரகசியமானதா?**

அப்படி இரகசியமாக ஒன்றுமில்லை. (1) தன்னைப் புதுப்பித்து பகிர்ந்தளிக்கும் திருச்சபையை நோக்கி (2) எம்மைப் பற்றிய புதிய நோக்கும், எம்மை நோக்கிய புதிய பணியும் (3) நாம் இன்றைய உலகின் இறைமக்கள் (4) சீடத்துவமும்-அருள் கொடைகளும், (5) குருக்கள், துறவியரின் வாழ்வும் பணியும். (6) பொது நிலையினரின் அழைப்பு (7) நாம் கடவுளின் மீட்புப்பணியை மக்களுக்கு வழங்கும் அமைப்பு. (8) அடிப்படைத் திருச்சபைகளும், குழுவாழ்வும் பங்கு அமைப்பும்; (9) உலகிற்குப் பணிபுரியும் திருச்சபையின் நிறுவனங்கள் என்ற

---

## அனுதாபத் தீர்மானம்

"ஒய்வுபெற்ற சுப்பிரமணியம் அவர்கள் அண்மையில் லண்டனில் மரணமானது குறித்து அன்னாரின் ஆங்கிலப் பேச்சு வன்மை, ஆசிரியர் சேவையின் சிறப்பு தன்மை மற்ற பொதுச் சேவையின் தன்மை முதலான பல்வேறு சிறப்புக்கள் பற்றி ஆராய்ந்து அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது."

சங்கானைப் பட்டினப் பிரதேச பொது நூலக வாசகர் வட்டக் கூட்டம் தலைவர் திரு நா. சு. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

---

# 60-ம் நாள் நினைவு அஞ்சலிகள்




| அமரர் | அமரர் |
|---|---|
| **கார்த்திகேசு ஆறுமுகம்** | **சிவகாமி ஆறுமுகம்** |
| தோற்றம்: 06-04-1903 | தோற்றம்: 12-06-1909 |
| மறைவு: 07-01-1994 | மறைவு: 05-01-1994 |

பெற்றுப் பேணிக் காத்து அன்பாய் தாலாட்டி
வளர்த்தவரே ஒரு கணமும் எங்கள் உள்ளத்தை
விட்டு நீங்காத தந்தையே, தாயே எங்கள்
வாழ்வு வளம்பெற சிறந்த வழிகாட்டியாய்
இருந்த எங்கள் அன்புத் தெய்வங்களே
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

(07-03-1994) இன்று எமது இல்லத்தில் நடைபெறும் இவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்;

புது வீதி,
ஆறுகால் மடம்,

மக்கள், மருமக்கள்
பெறா மக்கள், பேரப்பிள்ளைகள்;

(7675)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1994.03.07

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை -விநாயகபுரம் தம்பிலுவில் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

அசோக் (தம்பியப்பா சித்திரவேல் - தாண்டியடி, திருக்கோயில் அம்பாறை)

யாழ் - கோட்டை முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

வட்டுக்கோட்டை சுவடிப் பகுதியில் "சுப்பர் சொனிக்" விமானம் குண்டுவீசியபோது எனது கையை சேதமாகிப்படைந்தது.

இக்கையை குணப்படுத்துவதற்காக செப்டம்பர் 7 ஆம் திகதி கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன். நவம்பர் 11ஆம் திகதி பூரண குணமடையாத என்னை குணமடைந்து விட்டதாகக் கூறி ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேற்றினர்.

எனக்கு காலில் ஏற்பட்ட தாக்கத்தையடுத்து அதனூடாக ஒரு கண் பார்வையும் குறைந்து கொண்டது. இதற்கும் நான் சிகிச்சை பெற்றிருந்தேன். கொழும்பு வைத்திய

முயற்சி செய்தால் அது அழிவுக்கே வழிவகுக்கும். இவ்வாறு சபாநாயகர் எம். எச். முகம்மது தெரிவித்தார்.

அண்மையில் கட்டுநாயக்காவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் புதிய தலைமை நிலையத்தை திறந்து வைக்கும் வைபவத்தில்

முக்கியத்துவமற்ற விடயங்களை தேவையின்றிப் பெரிதுபடுத்தினால் வடக்கு-கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைதான் இங்கும் தொடரும் எனத் தெரிவித்தார்.

## மாணவர் மீது நடவடிக்கை வன்முறைக்கு தூண்டும்

### பேராதனை மாணவர் குறித்து தெரிவிப்பு

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தில் விடுதி வசதி பெற்றுத் தருமாறுகோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதை பல்கலைக்கழக அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் பொலிசார் தலையிட்டு தடுத்த சம்பவத்தைக் கண்டித்து மக்கள் ஐக்கிய முன்னணியின் இளைஞர் சம்மேளனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் தமது விடுதிவசதி தொடர்பானபிரச்சினையை தீர்த்துத் தருமாறு கோரி அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இந்நிலையில் அங்கு பொலிசார் வரவழைக்கப்பட்டு அப்போராட்டம் தடுத்து நிறுத்தப்பட்டதோடு மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறான செயல்கள் மாணவர்களைப் பேச்சுக்கள் மூலம் தீர்வுக்கு இணங்கச் செய்வதற்குப் பதிலாக வன்முறையை தூண்டக்கூடிய ஜனநாயக விரோதச் செயலாகவே அமையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிராம சேவையாளருக்கு பதவி உயர்வு பரீட்சை

இரண்டாந்தரத்தில் உள்ள கிராமசேவை அலுவலர்கள் முதலாந்தரத்திற்கு பதவி உயர்த்தப் படவுள்ளார்கள். இவர்களுக்கான எழுத்துமூலப் பரீட்சை அடுத்தமாதம் 19-ம் திகதி 51 நிலையங்களில் நடாத்தப்படவுள்ளன.

இப்பரீட்சையில் இரண்டாந் தரத்தைச் சேர்ந்த 6500 கிராமசேவை அலுவலர்கள் தோற்றவுள்ளனர். இலங்கை பரீட்சைத்திணைக்களம் இப்பரீட்சையை ஒழுங்கு செய்துள்ளது.


**சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கும் வெளிவந்து விட்டது!**

**"ஒளிவீச்சு ஜனவரி 94"**

(சிறப்பு செய்திகளாக கேணல் கிட்டு அவர்களின் ஓராண்டு நினைவின் நிகழ்வுகள்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் தவறாது கலை ஊடக இணையத்தில் இவ் ஒளி வீச்சை பதிவு செய்து (RECORDING) பெற்றுக் கொள்ளவும்.

**பதிவுக் கட்டணம் 100/- மட்டுமே**

- கலை ஊடக இணையம்

(வி-8786)


## பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

வட இந்து மகளிர் கல்லூரி அபிவிருத்திச்சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிறு காலை 9-00 மணிக்கு நடைபெறுமென அபிவிருத்திச்சங்க செயலாளர் தெரிவித்தார்.

குழுவாழ்வும் பங்கு அமைப்பும்; (9) உலகிற்குப் பணிபுரியும் திருச்சபையின் நிறுவனங்கள் என்ற தலைப்புகளில்தான் நிலைபாட்டு ஏடுகள் தயாரிக்கப் பட்டுள்ளன.

**(32) இந்த அமர்வுகள் எல்லாம் யாழ். ஆயர் அவர்கள் தலைமையில் தானா இடம்பெறும்?**

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தலைமையிலும், வழிகாட்டுதலிலும் தான் இம் மகாநாடே நடத்தப்படுகின்றது. ஆனால் எல்லா அமர்வுகளுக்கும் ஆயர் அவர்களே அவைத் தலைவராக இல்லாமல் மற்றைய குருக்கள், பொது நிலையினரையும் அவைத் தலைவர்களாக அமரும்படி ஆயர் அவர்கள் அழைத்துள்ளார்கள்.

**(33) பொது நிலையினரும் அவைத் தலைவர்களாக அமர்கிறார்களா?**

நிச்சயமாக அமர்கிறார்கள். முதலாவது அமர்வுக்கு ஆயர் அவர்கள் அவைத்தலைவராக அமர்ந்த பின்னர்; 8 குருக்கள் அவைத்தலைவர்களாக அமர்வார்கள்; ஒரு அருட்சகோதரியும், 4 பொது நிலையினரும் அவைத்தலைவர்களாக அமருவார்கள். திரு. ஏ. எவ். அகஸ்ரின், செல்வி எமில்டா யோசேப்பின், திரு. எஸ். என். சவுந்தரம், திரு ஜெயநாதன், ஆகியவர்களே அந்த நான்கு பொதுநிலையினரும்.

**(34) இம்மகாநாடு பாரிய மாற்றங்களை கொண்டு வருமா?**

பாரிய மாற்றங்களை உடனடியாகக் கொண்டு வருவதல்ல மகாநாட்டின் நோக்கம் எம்மைப் புதுப்பித்துப் பகிர்ந்து வாழும் அன்புச்சமூகமாக மாறுவதும் உண்மையாகவே மாற்றங்கள் தேவைப்படுமிடத்து தூய ஆவியின் துணையோடு அவற்றைக் கொண்டு வருவதுமே நோக்கமாகும்.

**(35) மகாநாடு வெற்றியளிக்குமா?**

என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள் இன்றைய காலத்தில் இவ்வாறு ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த, எமது வளர்ச்சிப்பாதையின் ஓர் முக்கிய மைல்கல்லான இம் மகாநாட்டைக் கூட்டுவதே ஒரு பெரு வெற்றிதானே? இந்த மகாநாட்டு நாட்கள் மட்டும் வெற்றியைத்தரும் என்று எதிர்பார்ப்பது தவறு நாம் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டோம். மகாநாட்டின் பின்னரும் எம்மைப் புதுப்பித்து, வெற்றிநடைபோட்டுக்கொண்டே இருப்போம்.

தந்த விளக்கங்கள் அனைத்திற்கும் அன்பான நன்றிகளும் மகாநாட்டிற்கு எமது வாழ்த்துக்களும்.

அன்பளிப்பு:

**வ. அ. எட்மன் குடும்பம் - ஜேர்மனி**

டாக்டர் A. L. ஏபிரகாம், பிலிப் நேசிங்கோம்

ரேடியோ மனுவல் ஸ்தாபனத்தினர்

**பொது மக்கள் தொடர்புக் குழு**

**மேய்ப்புப்பணி மகாநாடு**

(வி-8788)

இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்

1989ஆம் ஆண்டு கிளி - வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**துஷ்யந்தன்** (தங்கவேலாயுதம் ஜெயக்குமார்- பொலிகண்டி, வல்வெட்டித்துறை - யாழ்)

யாழ் - காங்கேசன்துறை - கீரிமலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**நாகலிங்கம் தேவராசா-சின்னத்தம்பி** (நகுலேஸ்வரா வீதி, கீரிமலை -யாழ்)

யாழ்- இளவாலைப் பகுதியில் தேசவிரோதக்குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**கதிர்காமு கந்தையா** (மயிலங்கூடல், இளவாலை யாழ்)

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப் பிரிந்த

**மேஜர் காண்டீபன்** (மகாலிங்கம் காண்டீபன்- கண்டாவளை - கிளிநொச்சி)

1991ஆம் ஆண்டு யாழ்- தச்சன்காட்டுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**மௌலி** (தம்பிராசா தங்கேஸ்வரன் - வெல்லாவெளி - மட்டு)

மங்கள ஓயாப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அகிலன்** (. . .)

யாழ் - காங்கேசன்துறை, கீரிமலை பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கராளசிங்கம்** (முருகேசு யோகராசா-சங்கத்தார் வயல்-இயக்கச்சி - பளை)

1992ஆம் ஆண்டு திருமலை -'பச்சனூர்' முகாம் இராணுவத்தினர் மல்லிகைத்தீவுப் பகுதியிற் பதுங்கியிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிற் கொல்லப்பட்ட 02 இளைஞர்கள், மற்றும் இதே பகுதி வாசிகள் ஆகிய 03 தமிழர்கள்

1993ஆம் ஆண்டு யாழ் - மாவட்டத்தில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த.

**ஈசன்** (செல்வராசா சிவனேசன் -தனங்கிளப்பு மறவன்புலோ கைதடி -யாழ்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(வி-8777)

# புலிகளுக்கு உதவியதாக நான்கு சிங்களவர் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு உதவிசெய்ததாககூறி நான்கு சிங்கள வர்த்தகர்களை சிறிலங்கா பொலிசார் கைது செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு உதவிகளும், பொருள்களும் வழங்கிய மேற்படி நான்கு சிங்களவரையும் பொரளை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக மின்னேரிய பொலிசார் தகவல்களை பெற்றுவருவதாகவும் எனவே இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

# வைக்கல் வண்டியிலிருந்து வீழ்ந்தவர் மரணம்

(தொல்புரம்)

வைக்கோல் ஏற்றிவந்த வண்டியில் இருந்து தவறி வீழ்ந்த ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரும்போது இடையில் மரணமானார். கடந்த முதலாம் திகதி இடம் பெற்ற இச் சம்பவத்தில் பண்டத்தரிப்பைச் சேர்ந்த வைரமுத்து ஜெயபாலன் (வயது33) என்பவரே மரணமானவர் ஆவார். இவரது சடலம் மேற்படி வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து மரணவிசாரணையின் பின் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டதாக தெரிய வருகிறது. (41)

# அவுஸ். பல்கலைக் கழக புலமை பரிசில் விண்ணப்பம்

அவுஸ்திரேலியப் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பிற்கான புலமைப் பரிசில்களைப் பெறுவதற்கு அல்லது அவுஸ்திரேலியாவில் தொழில் நுட்பம் மற்றும் உயர் கல்வி கல்லூரிகளில் தொழில் கல்விப் பயிற்சியினைப்பெற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப்படிப்பிற்கு உயர்தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 300 புள்ளிகளையும், தொழில் கல்விக்கு உயர் தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 250 புள்ளிகளையும் பெற்று 1994-01-01 அன்று 18-28 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். இது குறித்த மேலதிக விபரங்களை ஈழநாதம் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

ஜே. வி. பி. தலைவரை மறைத்து வைத்திருந்த

# இராணுவ கப்டனுக்கு 6 மாத கடூழியச் சிறை

(கொழும்பு)

ஜனதா விமுக்திப் பெரமுனைத் தலைவர் சோமவன்ச அமரசிங்கா பற்றிய தகவலை மறைத்த குற்றத்திற்காக சிறிலங்கா இராணுவக் கப்டன் ஒருவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

கப்டன் தர்மசிறி நிசங்காவுக்கு (வயது: 35) தண்டனை வழங்கிய நீர்கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சோமவன்ச பற்றிய விபரங்கள் பொதுசனத் தொடர்புச் சாதனங்களில் வெளிவந்திருந்தன. அவ்வாறிருக்கப் பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஆகிய நீர், அவரைப் பற்றித் தெரிந்திருந்தும் கைது செய்யத் தவறியது குற்றமாகும் என்றார்.

கப்டன் நிசங்கா பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டார்.

றோகண விஜேவீராவின் மரணத்திற்குப் பிறகு சோமவன்ச அமரசிங்கா ஜனதா விமுக்திப்பெரமுனவின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றிருந்தார். இப்போது சோமவன்ச வெளிநாடு ஒன்றில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

# ஆயுதபாணிகள் வாக்களித்தே ஐ. தே. க. வெற்றியீட்டியது

## 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் கூறுகிறார்

(கொழும்பு)

ஆயுத பாணிகள் வாக்களித்த பகுதிகளின் மட்டுமே ஐக்கிய தேசிய கட்சி வெற்றியீட்டியுள்ளது. இவர்களினால் இவ்வாறு வாக்களிக்க முடியாத இடங்களிலே ஐக்கிய தேசிய கட்சி தோல்வி அடைந்து இருப்பதாக ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த கிழக்கு மாகாண தேர்தல் தொடர்பாக பி. பி. சியின் சிங்கள சேவையாகிய சந்தேசியவுக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்தார். சில இடங்களில் ஐக்கிய தேசிய கட்சியினால் குண்டர்களையும், ஆயுத குழுவினரையும் பயன்படுத்த முடியாது போனதாகவும் இதனால் அவ்விடங்களில் தோல்வி அடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்து வன்முறையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் மறைவின் பின்னர் வன்முறை குறையும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அக்கட்சியும், அதன் தலைமையும் தொடர்ந்து வன்முறையில் மட்டுமே நம்பிக்கை செலுத்தி வருகிறது என குற்றம் சாட்டினார்.

# யுத்தத்தை ஆரம்பித்து வைத்தது ஜெயவர்த்தனாவின் ஆட்சியே

## -வெள்ளவத்தை ஞானநபிவங்ச தேரோ

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாதான் இந்த யுத்தத்தை ஆரம்பித்து வைத்தவர் ஆகும். எனினும் நாட்டின் இன்றைய நிலைக்கு ஆட்சி நடத்திய அனைத்து அரசாங்கங்களும் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு வெள்ளவத்தைஞானநபிவங்ச தேரர் தெரிவித்தார்.

மாளிகாவத்தை சதுக்கத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; யுத்தம் என்பதன் அர்த்தம் மனிதப் படுகொலைகளாகும். மனிதனைக் கொலைசெய்ய எவர்தான் விரும்புவார்கள்? அனைத்து சமயங்களும் யுத்தத்தை வெறுக்கின்றனவே எனத் தெரிவித்தார்.

அத்துடன் விஜயனின் பரம்பரை என்று கூறுவதில் சிங்களவர் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். விஜயன் எங்கிருந்து வந்தான்? இந்தியாவிலிருந்துதான் விஜயன் வந்தான் என்பது சிறுபிள்ளைகளுக்கும் தெரியும். இந்த நிலையில் தமிழர்களும் சிங்களவர்களும் இனவாதத்தைக் கிளறிவாழ்வது வெட்கமடைய வேண்டிய செயலாகும்.

இந்நாட்டின் அரசியல் கட்சிகள் மக்களை இந்த நிலைக்கு பேதப்படுத்தியுள்ளன. இதற்கான பொறுப்பை அரசியல் கட்சிகள் அனைத்தும் ஏற்க வேண்டும். அதிகாரத்திலுள்ளவர்கள் தமது அதிகாரங்களைப் பலப்படுத்த மட்டுமே செயல்படுகின்றனர்.

இன்று கூட எமது அரசியல் கட்சிகளுக்கு வடக்கில் நடைபெற்றுவரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாமல் இருக்கிறது. இனிமேலாவது இப்பிரச்சினைக்கு கூடிய விரைவாக தீர்வுகாண செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# அஷ்ரப் பதவி துறப்பையடுத்து மு.கா. சட்டப்பிரச்சினை எதிர்நோக்கும்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்கப்போவதாக முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் அறிவித்ததைத் தொடர்ந்து அக் கட்சி சட்டப்பிரச்சினை ஒன்றை எதிர்நோக்கி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

1989 ம் ஆண்டுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களில் அஷ்ரப்பிற்கு அடுத்த படியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் பதவியை வகித்த சேகு இஸ்ஸதீன் ஆவார். ஆனால் சேகு இஸ்ஸதீன் தற்போது முஸ்லிம் காங்கிரசில் உறுப்பினராக இல்லை என்பதுடன் முஸ்லிம் கட்சி என்ற பெயரில் தனிக்கட்சியையும் நடத்தி வருகிறார்.

முஸ்லிம் காங்கிரசின் கட்சியிலிருந்து இஸ்ஸதீனின் பெயரை நீக்கும்படி கட்சி தேர்தல் ஆணையாளர் கேட்டிருந்தபோதும் அவர் அதற்கு இணங்கவில்லை. இந் நிலையில் அஷ்ரப் பதவி துறந்தால் அவ்வெற்றிடம் நிரப்பப்படுவதில் சட்டப்பிரச்சினைகள் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே பாராளுமன்றம் 22 ம் திகதி கூடுவதற்கு முன்பாக கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் மு. கா தலைவர் அஷ்ரப் கலந்து கொண்டு தனது பதவி துறப்பு தொடர்பாக அறிக்கை வெளியிட

# இன்றைய நிகழ்வுகள்

யாழ் இந்து மைதானச் சந்தியில் அமைந்துள்ள மெய்கண்ட தேவர் ஆதீன மண்டபத்தில் இன்று காலையில் காரிகார்நாயனார் குருபூசையும், சிற்றம்பல அடிகள் நினைவுப் பேருரையும் இடம் பெறவுள்ளது.

ஃ ஃ

சுந்தர்மடம் ஆத்திசூடிவீதியிலுள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று ஔவையார் விழா இடம்பெறவுள்ளது. மூன்றாவது ஆண்டாக தொடர்ந்து நடைபெறும் இவ் விழாவில் பேச்சுப்போட்டி சிறுவர் நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன.

ஃ ஃ

யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச போசாக்கு இணைப்புக்குழுவின் ஆரம்ப கூட்டம் இன்று காலை பத்து மணியளவில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (24)

ஃ ஃ

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகலில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் தலைமையில் நடைபெற இருக்கும் இப்போட்டியில் முதன்மை விருந்தினராக பிரதேச செயலர் து. வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக திருமதி இருதயநாதன், ஐ. மனோகரன், தி. இந்திரையன், ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக க. கதிர்காமக் குருக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ

கோப்பாய் மகாவித்தியாலய அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் வித்தியாலய அதிபர் தலைமையில் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் இடம் பெறவுள்ளன.

ஃ ஃ

(கொழும்புத்துறை)

மதுவரிப் பரிசோதகர் பதவிக்கான ஆரம்ப நேர்முகப் பரீட்சை இன்று தொடக்கம் புதன்கிழமை வரை மூன்று தினங்களும் யாழ் மாவட்ட மதுவரித் திணைக்கள ஆணையாளர் பணிமனை (குருநகர் கடற்கரைவீதி) யில் காலை 9.00மணி தொடக்கம் நடைபெறும் என யாழ் மாவட்டமதுவரிஉதவிஆணையாளர் திரு. நா. நாகரத்தினம் தெரிவித்துள்ளார் (24)

ஃ ஃ

சென். அன்ரனிஸ் மைதானத்தில் இன்று பிற்பகல் சென். அன்ரனிஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஞான முருகன் விளையாட்டு கழக அணி மோதவுள்ளது. குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இது இன்று இடம்பெறுகிறது.

# நோயாளிகளின் மருந்துகள் கடற்படையால் பறிப்பு

(வடமராட்சி)

கொழும்பில் இருந்து நோயாளிகள் தமது பாவனைக்கு எடுத்துவந்த மருந்து வகைகள் திருகோணமலை கடற்படையினரால் பறிக்கப்பட்டன.

திருகோணமலை துறைமுகத்தில் நோயாளிகளின் பொதிகள் மீது நடைபெற்ற சோதனையின் போது கடற்படையினர் முக்கிய மருந்து வகைகளை யாழ். குடாவுக்கு எடுத்துச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதாகவும் இதனையடுத்து மருந்துகளை எடுத்துவிட்டதாகவும் வந்து சேர்ந்த நோயாளிகள் தெரிவித்தனர்.

இவ்விருந்து மருந்து வகைகளை யாழ் குடாவுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கிறீர்கள் என்று கூறிவிட்டு மருந்து வகைகள் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (யோ)

## வடமராட்சி கிழக்கில் நெருப்புக் காய்ச்சல் தீவிரம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சேவையாற்றும் அரச ஊழியர்களில் ஒரு சிலர் நெருப்புக்காய்ச்சலுக்கு இலக்காகி உள்ளனர்.

அப்பகுதியில் மலேரியா, நெருப்புக்காய்ச்சல் போன்ற ஆபத்தான நோய்கள் தீவிரமடைந்திருப்பதாகவும் இந் நோய்க்கு பலர் இலக்காகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (யோ)

கள் பொதுசனத் தொடர்புச் சாதனங்களில் வெளிவந்தி றில் இருப்பதாகத் தெரிய வருகிறது.

1989ம் ஆண்டுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களில் அஷ்ரப்பிற்கு அடுத்த படியாக அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் கட்சியில் அப்போது தவிசா டியவிலிருந்து இஸ்ஸதீனின் பெயரை நீக்கும்படி கட்சி தேர்தல் ஆணையாளர் கேட்டிருந்தபோதும் அவர் அதற்கான அதிகாரம் தமக்கு இல்லை எனக் கூறி மறுத்து கூட்டத்தில் மு.கா தலைவர் அஷ்ரப் கலந்து கொண்டு தனது பதவி துறப்பு தொடர்பாக அறிக்கை வெளியிட போதிய நேரம் கேட்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

களை யாழ் குடாவுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்தீர்கள் என்று கூறிவிட்டு மது நோய்க்கு பலர் இலக்காகி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (யோ)

வெள்ளப் பாதிப்பு நிவாரணமாக

## அரசாங்க ஊழியர்களுக்கு வட்டியற்ற கடன்

(கொழும்பு)

கடும் மழையினால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வட்டியற்ற கடன்களை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக 'தினமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் பெய்தகடும் மழையை தொடர்ந்து வீடுவாசல் மற்றும் சொத்துகளுக்கு அல்லது உடைமைகளுக்கு பாதிப்பு அடைந்த மேற்படி அரசாங்க ஊழியர்களுக்கு இக்கடன் முற்பணமாக வழங்கப்பட விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மாகாண தேர்தல்; அனுரா கூட்டத்தில் குழப்பம்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சி மீது குற்றம் சாட்டி பேசிய அநுரா பண்டாரநாயக்கா மீது மக்கள் ஆத்திரம் கொண்டு குழப்பம் விளைவித்ததைத் தொடர்ந்து அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

தென்மாகாண சபையின் மொறவேவ பகுதியில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தின் போது சுதந்திரக்கட்சி மீதும் அக்கட்சி கொள்கை மீதும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா குற்றங்களை சுமத்திக்கொண்டு செல்லும் போது அங்கிருந்த மக்களால் குழப்பம் விளைவிக்கப்பட்டதாகவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் நிலைமையை கட்டுப்படுத்த முடியாத அளவு மக்கள் கூச்சலிட்டதாகவும் இதைத் தொடர்ந்து அனுராபண்டாரநாயக்கா எதுவும் பேச முடியாத நிலையில் கூட்டத்தை விட்டு இறங்கிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதனால் ஏற்பட்ட பதற்றத்தைத் தொடர்ந்து கூட்டம் கலைந்தது என கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## செயலமர்வுகள்

எதிர்வரும் 13, 14ஆம் (ஞாயிறு, திங்கள்) திகதிகளில் மருதனார் மடம் தொலைக்கல்வி நிலையத்தில் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான விசேட பாட நெறிகளுக்கான இரண்டு நாள் செயலமர்வுகள் நடைபெறவுள்ளதால் சகல இரண்டாம் வருட பயிலுனர் ஆசிரியர்களையும், விசேட பாட நெறிகளுக்கான போதனாசிரியர்களையும் நாளை 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நிலையத்திற்கு சமுகம் தந்து விசேட அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார்.

# அமிழும் ஓட்டைக்கப்பல் போல ஐ.தே.க. இன்று இருக்கிறது

• சந்திரிகா வர்ணிப்பு

(கொழும்பு)

ஐ.தே.க. இன்று அமிழ்ந்து போகும் ஒரு கப்பலைப் போன்று இருக்கிறது அந்த ஓட்டைக் கப்பலில்தான் எனது தம்பி அநுராவும் ஏறியுள்ளார். அவரின் பாரம் தாங்க முடியாமலேயே ஐ.தே.க இறுதியில் மூழ்கிவிடும் இவ்வாறு மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

தென் மாகாண சபைக்கு போட்டியிடும் மாத்தறை மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து இமதுவை என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஐ.தே.க கடந்த பதினேழு வருட காலங்களாக நாட்டை ஆட்சி புரிந்துள்ளது. மக்களை ஏமாற்றி மனித உரிமைகளைப் பறித்தே கடுத்தது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் பொய்த்து விட்டன. இன்றைய அரசாங்கத்தை நம்பி வாழ்ந்து ஏமாற்றமும், விரக்தியும் அடைந்து போன மக்களின் முகங்களில் இப்போது புதிய ஒளி படர்ந்திருப்பதைக் காண முடிகிறது தென்மாகாண தேர்தல் பொதுத்தேர்தல்களுக்கும், ஜனாதிபதி தேர்தலுக்கும் வழிகாட்டியாக உள்ள தேர்தல் என்பதை நாம் மறந்துவிட முடியாது அரசாங்கத்தின் ஊழல் மிகு பரிபாலனத்திற்கு எதிர்வரும் 24-ம் திகதி மக்களின் உண்மையான தீர்ப்பு கிடைத்துவிடும்

இன்று வறிய மனிதனால் சமாளிக்க முடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவு கூடியிருக்கிறது. நாட்டில் எழுபது வீதமானோர் போசாக்கின்மையால் தவித்துக்கொண்டிருக்கும்போது சிலர் சுக போகங்களை அனுபவிக்கின்றனர். இதுதானா நேர்மை, நீதி? இலைதோறை உள்ளவர்களைக்குவோம் எனக்கூறி பதவிக்கு வந்த சிலர் உணவுக்காக 127 இலட்சம் ரூபாவை செலவிட்டிருக்கின்றனர். இந்தளவு தொகையை செலவிட்டு தமக்கத்தையா அவர்கள் உட்கொண்டனர்? பாதுகாப்பிற்கென 250 பேர்வரை வைத்திருந்தனர். அவர்களுக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டது இது யாருடைய பணம்? எனவும் கேள்வி எழுப்பினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் மாகாண முதல்வர் அமரசிறி தொடங்கொட, பாராளுமன்ற உறுப்பினர்கள் றஞ்சித் மத்தும பண்டார, தர்மசிறி சேனநாயக்க, மற்றும்சமரவீர வீரவன்னி, எஸ் பி தஸநாயக்க, மகிந்த விஜேசேகர உட்பட பலர் உரையாற்றினர்.

## கிழக்கு தேர்தல் முடிவுகள் ஐ. தே. கவுக்கு தோல்வியே

(கொழும்பு)

கிழக்கு மாகாண உள்ளூராட்சித்தேர்தல் முடிவு ஐக்கிய தேசிய கட்சியைப் பொறுத்த மட்டில் அரசியல் ரீதியாக படுதோல்வியே சந்தித்துள்ளது என பிரபல அரசியல்கட்டுரையாளர் றோகான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி சிங்கள சேவையாளர் சந்தேசியவுக்கு இவர் அளித்த பேட்டியில் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் சிறுபான்மை மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது கொண்டிருந்த வெறுப்பை காட்டியுள்ளனர் என்றும் விசேடமாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தமிழ் மக்கள் பிரச்சினையில் காட்டிய மாற்றான் தாய் மனப்பாங்கிற்குக் கிடைத்த எதிர் அலைகள் தான் இதுவென்றும், சிறுபான்மை மக்கள் தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியின் மீது கொண்டிருந்த வெறுப்பு மிக தீவிரம் அடைந்திருப்பதை இது காட்டுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சிவராத்திரி விடுமுறையில் ஆக்க ஓவியப் போட்டியா?

ஆசிரியர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தில் யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டில் ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டி நடத்துவது குறித்து ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். இத்தினத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மற்றும் அளவாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. அதேவேளை 10-ம் திகதி வியாழக்கிழமை கோப்பாய் கோட்டத்தில் மாணவர் உடற்பயிற்சிப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது குறித்துப் பெற்றோர் அதிருப்தி தெரிவிக்கிறார்கள்.

## தொழுநோயாளர் நால்வர் இனங்காணப்பட்டனர்

(பருத்தித்துறை)

சுகாதாரத் திணைக்களத்தினரும் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து வடமராட்சி கிழக்கு அம்பன் ராஜன் நகரில் நடாத்திய தொழுநோய் ஆய்வின்போது நான்கு தொழுநோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று தொழுநோய் ஆய்வுகளை மேற்கொண்ட குழுவினர் தெரிவித்தனர்

இந் நகரில் உள்ள 265 பேர் இவ்வைத்திய ஆய்வுகளின் போது பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர். குடற் புழு நோயினாலும் காய்ச்சலினாலும் உயிர்ச்சத்துக்கள் குறைவுகளினாலும் சிரங்கினாலும் பலவியாதிகளினாலும் பீடிக்கப்பட்டவர்களும் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர். பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டவர்களில் 125 பேருக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

## கண்டெடுப்பு

மூச்சக்கர வண்டியில் பயணம் செய்த நல்லதம்பி அன்னபூரணம் என்பவரது தேசிய அடையாள அட்டை, மணிப் பேர்சு ஒன்று உட்பட சில பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு மூச்சக்கர மோட்டார் வண்டிச் சேவை சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

❀ ❀ ❀

ஒண்டிமுத்து செல்லன் ராஜேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுசமுதாயம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## வாக்குச் சாவடியில் இளம்பெண் கைது

(திருமலை)

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற அக்குறு சாம்பல்தீவில் வாக்குச்சாவடி ஒன்றிற்கு அருகில் வாக்காளர் அட்டையுடன் நின்ற இளம்பெண் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

# உயர் உத்தியோகத்தர் சிகிச்சைக்கு யாழ்.செஞ்சிலுவை 75,000 நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஏற்பட்ட சுகவீனத்திற்கு வெளிநாட்டில் சிகிச்சை பெறுவதற்கான நிதியுதவியை வழங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சகல கிளைகளும் முடிவு செய்திருப்பதாக தெரியவருகிறது.

இந்த அடிப்படையில் வட பகுதியில் செயற்படும் கிளைகள் இவரின் மருத்துவ செலவிற்காக பல ஆயிரம் ரூபாய்களையும், சில கிளைகள் லட்சக்கணக்கான ரூபாய்களையும் நிதியுதவியாக அளிக்க வழங்கியிருப்பதாகத் தெரிய வருகின்றது. இந்த நிதியைப் பெற்றுக்கொண்டு மேற்படி உயர் உத்தியோகத்தர் மிக விரைவில் மருத்துவ சிகிச்சைக்காக தனது வெளிநாட்டுப் பயணத்தை ஆரம்பிக்க இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இந்த நிதியுதவியைப் பெற்றுக் கொண்டிருப்பவராக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த உயர் உத்தியோகத்தர் என்றும், செஞ்சிலுவைச் சங்க சேவைக்காக மாதாந்தம் ரூபா பதினையாயிரம் வரையில் சம்பளமாகப் பெறுபவர் என்றும் கூறப்படுகின்றது.

இந்த உத்தியோகத்தரின் மருத்துவ செலவுகளுக்கென யாழ்ப்பாண கிளைசெஞ்சிலுவை மனிதநேய அடிப்படையில் எழுபத்தியையாயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்சேவையின்போது உயிரிழந்த யாழ்ப்பாணகிளையின் உப தலைவர் புவனேந்திரனின் மரணத்தையடுத்து செஞ்சிலுவைச்சங்கத் தலைமை அலுவலகம் இரண்டு லட்சம் ரூபாவை அளித்திருந்தது தெரிந்ததே.

எனினும் செஞ்சிலுவைச் சங்க தொண்டர் சேவையில் ஈடுபட்டிருந்தபோது வற்றாப்பளை அம்மன் கோவில் பகுதியில் இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலின் போது காயமடைந்த தொண்டர்களுக்கு இச் சங்கம் உதவிகளைச் செய்ததாகத் தெரிய வரவில்லை. இத்தாக்குதலின் போது காயமடைந்த பலர் பல மாத காலம் சிகிச்சை பெற்று வந்ததும், சாதாரண உதவிகளுடன் மட்டும் செஞ்சிலுவைச் சங்கம் ஒதுங்கிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மன்னார் மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளைத் தலைவரும் இன்னும் இரு அதிகாரிகளும் கொழும்பிற்கு செஞ்சிலுவைச்சங்கக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றபோது பொலிசாரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து ஏழு மாத காலத்திற்கும் அதிகமாக காவலில் வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## பிறப்பு பதிவுக்கு ஏற்பாடு

வடமராட்சிப் பகுதியில் காலங்கடந்து பதிவு செய்யப்படாமல் இருக்கும் பிறப்பு, இறப்புக்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை மாவட்ட காணிப்பதிவு அலுவலகம் மேற்கொண்டுள்ளது. எனவே காலம் கடந்த பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்புக்களைப் பதிவுசெய்துகொள்ள வேண்டியவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியா சென்று அகதிகள் முகாமில் தங்கியிருந்தபோது பிறந்த பிள்ளைகளின் பிறப்புக்களைப் பதிவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (25)

# 'கியூபெக்'தனி நாடாவது பற்றி ஐ. நா. செயலரிடம் பேச்சு

கனடாவில் பிரெஞ்சுமொழி பேசும் கியூபெக் மாகாணத்தின் முக்கிய பிரிவினைவாத தலைவர் லூசியன் பெரிச்சாட் தனி சுதந்திரநாடுபற்றி ஐ. நா. பொதுக் காரியதரிசி பொட்ரோஸ் காலியிடம் தெரிவித்தபோது ஐ. நா.விலுள்ள கனேடியத்தூதரும் உடனிருந்தார்.

''இது முற்றிலும் ஒரு உள்நாட்டுவிவகாரம்ஆகும். ஆனால் கனடாவில் கொந்தளித்து வரும் விஷயம்குறித்து ஐ நா. அணையாளர் தெரிந்துகொள்ளவேண்டும் என நான் விரும்புகிறேன்'' என நிருபர் மாநாடு ஒன்றில் அவர் கூறினார்.

அபிப்பிராய வாக்கெடுப்பில் கியூபெக் சுதந்திரத்தை மக்கள் ஆதரித்தால் அது சர்வதேசப் பிரச்சினையாகிவிடும் இந்நிலையில் ஐ. நா. போன்ற ஸ்தாபனங்கள் அதை அங்கீகரிக்குமாறு கோரப்படும்'' எனவும் பெரிச்சாட் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் கனடாவின் எதிர்க்கட்சியான கியூபெக் கோய்ஸ் குருவின் தலைவராக பெரிச்சாட் தெரிவானபின் அவரதுபெயர் சர்வதேச அரங்கில் பிரபலமாயிற்று.

பிரதமர் கிரெட்டியனின் லிபரல் கட்சிக்குப் பெரிச்சாடின் கட்சியே பெரியது ஆகும்.

கனடாவின் எதிர்க்கட்சி தலைவர் என்ற வகையில் பொஸ்னியா ஹெய்ட்டி போன்ற சர்வதேச பிரச்சினைகள் பற்றி தாம் விவாதித்ததாகவும் அப்போதே கியூபெக் பற்றியும் பிரஸ்தாபித்ததாகவும் அவர்கூறினார்.

இதன் காரணமாகவே கனடாவின் ஐ. நா. தூதரும் இக்கூட்டத்தில் இருந்ததாக அவர் கூறினார்.

பெரிச்சாட் வாஷிங்டன் செல்லும் வழியில் ஐ. நா.வில் தரித்து நின்றார். கியூபெக் தனிநாடானால் அமெரிக்க நலன்கள் பாதிக்கப்படமாட்டா என்றும் அவர் கூறினார்.

# சுயநிர்ணய உரிமையை ஏற்பதே அர்த்தபுஷ்டியான தீர்வுக்கு வழியாகும்

- நவசமசமாஜக்கட்சி

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல் வடக்கு, கிழக்கு பகுதிப் பிரச்சினைக்கு எந்த விதமான அர்த்த புஷ்டியான ஜனநாயக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது என்பதையே அண்மைய உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுவதாக நவசமசமாஜக் கட்சி கூறியுள்ளது. அண்மைய தேர்தல் முடிவுகள் தொடர்பாக இக்கட்சியின் அரசியல் குழு கொழும்பில் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்தத் தேர்தல்கள் முற்று முழுதான மோசடியாகும். தமிழ்க் கட்சிகள் என்றழைக்கப்படும் பலவும் அரசாங்கத்திடமிருந்து ஆயுதங்களையும், நிதி உதவியையும், வேறு உதவிகளையும் பெற்றுவந்துள்ளன. தேர்தலில் பல இடங்களிலும் உண்மையான வாக்காளரில் ஒருவராவது வாக்களிக்கவில்லை. தேர்தல் முடிந்தபின் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இராணுவ அடக்குமுறையாகவே எப்போதும் நடத்திவந்துள்ள இந்த அரசாங்கம் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருப்பதாகக் கூறுவது வேடிக்கையானதாகும்.

வுக்கு முட்டாள்தனமானதாகும். இந்த தேர்தல்களுக்கு நம்பகத் தன்மையை பெற தவியாய் தவித்த அரசுக்கு இவ்வகையில் சுதந்திரக் கட்சி ஓரளவுக்கு உதவி இருக்கின்றது. எதிரணி மக்களை இப்படிக் காட்டிக் கொடுப்பதை பழைய இடதுசாரிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும்கூட ஏற்றுக்கொள்ளுமோ என்பதும் சந்தேகமே எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரேமாமைத்துனர் கொலை

## தேடப்பட்ட நபர் நீதிமன்றில் சரண்

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மைத்துனர் பம்றபாலா விக்கிரமதுங்காவின் கொலைதொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த நபரான விக்கிரமசிங்க தனது சட்டத்தரணி முன் கல்கிசை நீதிமன்றில் சரணடைந்தார்.

விக்கிரமதுங்க கடந்த பெப்ரவரி 9-ம் திகதி அவரது இல்லத்தில் கத்திக்குத்து காயங்களுடன் இறந்து காணப்பட்டார். இவரதுகொலைதொடர்பாக தேடப்பட்டுவந்த நபரான விக்கிரமசிங்கா சரணடைந்ததைத் தொடர்ந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## பத்து தமிழ் இளைஞர்கள் வியாழனன்று விடுதலை

பண்டாரவளை தடுப்பு முகாமிலிருந்து பத்து தமிழ் இளைஞர்கள் கடந்த வியாழனன்று விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழு பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், மூவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் ...

...நாதன் செல்வம், முத்தையா கோவிந்தராஜ், சபாபதி பரமேஸ்வரன், இளையதம்பி தேவராஜா, எஸ். கணபதிப்பிள்ளை, எம். சிவலிங்கம், முருகேசு உதயகுமார், இரத்தினம் செல்வக்குமார் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்...

# கலைஞர் நிறுத்தும் வேட்பாளரை தோற்கடிக்க வேண்டும்

வை. கோபாலசாமி

(சென்னை)

பெருந்துறை மற்றும் மைலாப்பூர் சட்டப் பேரவைத் தேர்தல்களில் கருணாநிதி நிறுத்தும் வேட்பாளர்களைத் தோற்கடிப்போம் என்று வை. கோபாலசாமி கூறியுள்ளார்.

மதுரையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த அவர் மேலும் கூறுகையில்; மத்திய மற்றும் மாநில அரசுகள் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு விட்டது. நாங்கள் நேர்மையான - உண்மையான அரசியல் நடத்துவோம் என்பதால் மக்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை ஏற்பட்டு உள்ளது. அதனால்தான் மக்கள் ஆதரவு எங்களுக்கு பெருகி வருகிறது. திருச்சியில் நாங்கள் எடுத்த முடிவை தி.மு.கவின் 60 சதவீதமான தொண்டர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்தி எதிர்ப்பு தியாகிகள் நினைவு நாள் பேரணியை சென்னை, மதுரை தவிர மற்ற நகரங்களில் எழுச்சியுடன் நடத்தினோம். கருணாநிதி தரப்பில் இதை ஒட்டி அறிவிக்கப்பட்ட கூட்டங்களில் 25 சதவீதம் தான் நடந்து இருக்கிறது. அதற்கு மக்கள் ஆதரவு அதிகம் இருக்காததால் எங்கள் மீது ஆத்திரப்பட்டு ஏதேதோ பேசுகிறார்கள்.

தமிழகத்தில் நான் இப்போது இரண்டாம் கட்ட சுற்றுப்பயணம் தொடங்கி இருக்கிறேன். நான் செல்லும் பாதைகளில் குறிப்பாக கிராமப் புறங்கள் மக்கள் ஆதரவு எங்களுக்குப் பெருகி வருவதைக் காணமுடிகிறது. உறுப்பினர் சேர்ப்பு படிவங்களை இளைஞர்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.

சென்னையில் நடந்த அண்ணா நினைவு நாள் பேரணியின்போது கருணாநிதிக்கு வந்ததுபோல பல்லாயிரக் கணக்கானோர் எங்களுடன் கூட்டமாகத் திரண்டு வந்தனர்.

இதன் மூலம் தலைநகரிலும் எங்களுக்கு செல்வாக்கு இருப்பது நிரூபணமாகி இருக்கிறது.

சென்னையில் ஒரு கோடி ரூபா செலவு செய்து சமூகப் பேரணி நடத்தினார்கள். இலவச வாகன வசதிசெய்து கொடுத்தும் கூட போதியளவு தொண்டர்கள் பேரணியில் கலந்து கொள்ளவில்லை. பேரணி முக்கியமான சாலைகளில் செல்லாமல் குறுகிய சந்துகள் வழியே சென்றது.

கருணாநிதியால் அறிவிக்கப்பட்ட அண்ணா நினைவு நாள் கூட்டம் பல இடங்களில் நடக்கவில்லை.

கலைஞரை மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதை வரும் இடைத்தேர்தல் முடிவுகள் நிரூபிக்கும். பெருந்துறை, மைலாப்பூர், இடைத் தேர்தல்களில் கலைஞர் தரப்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்களை தோற்கடிப்போம்.

நாங்கள் தான் உண்மையான தி.மு.க அதன் சின்னமான உதய சூரியன் யாருக்கு சொந்தம் என்பதை தேர்தல் கமிஷன் தான் தீர்மானிக்க முடியும்.

## இலங்கையர் ஒருவர் திருச்சியில் கைது

(சென்னை)

இலங்கையைச் சேர்ந்த ஒருவர் தமிழ்நாட்டிலுள்ள திருச்சி நகரில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். காப்பிபோசா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே கடத்தலில் ஈடுபட்டிருந்ததாகவும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

## சமய நூல்கள் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

சரசாலை இந்து இளைஞர் மன்றம் தனது பெரிய பணிகளில் ஒன்றாகச் சமயப்பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து பல இந்து சமய நூல்களை இலவசமாக அச்சிட்டு வெளியிட்டு வருகிறது.

இதன் பிரகாரம் அண்மையில் 'காரிய சித்தி மாலை' நூலை சிவநெறிச் செம்மல் அமரர் சு. நமசிவாயம் நினைவாக இம்மன்றம் அச்சிட்டு இலவசமாக வெளியிட்டுள்ளது.

இச்சேவையைப் பாராட்டி பல பொதுஅமைப்புக்கள் மன்றச் செயலாளர் திரு. க. சிவசிதம்பரநாதன் அவர்களை

டின் பல பொதுஅமைப்புக்கள் மன்றச் செயலாளர் திரு. க. சிவசிதம்பரநாதன் அவர்களையும், மன்றத்தினரையும் வெகுவாகப் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளனர். (24)

பிறப்பித்திருப்பதாகக் கூறுவது வேடிக்கையானதாகும்.

இந்தப் போலியான தேர்தலில் சுதந்திரக்கட்சி பங்கு பற்றியமை நம்ப முடியாதவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், மூவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விநாசித்தம்பி குலலிங்கம், தனராஜா, சிவகுமார், பத்திருசேக உதயகுமார், இருதயம் செல்வக்குமார் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

கடந்தவாரம் விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகளான இரு பொலிசாருக்குப் பதிலாகவே இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா தெரிவித்தார்.

நந்து இருக்கிறது. அதற்கு மக்கள் ஆதரவு அதிகம் இருக்கா

களில் செல்லாமல் குறுகிய சந்துகள் வழியே சென்றது.

ளைப் புலிகளின் ஆதரவாளர் எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

# எனது நிலைப்பாடு சரியானதென உலகத் தமிழர் ஏற்கின்றனர்

**- தொண்டமான்**

(கொழும்பு)

"இன்றைய அரசியல் சூழ்நிலையில், இலங்கைவாழ் இந்திய வம்சாவளி, சமூகத்திற்கு மாத்திரமல்ல அனைத்து சிறுபான்மை இன மக்களுக்கும் ஏற்பட்டுள்ள ஆபத்து உணர்ந்து செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம்" இவ்வாறு அமைச்சர் எஸ். தொண்டமான் புசல்லாவையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

மேலும் அவர், உலகத்தமிழர்கள் பலர் நாள்தோறும் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கின்றனர். அவர்கள் அனைவரும் எனது நிலைப்பாட்டினைச் சரி என்றே கூறுகின்றனர். இன்றைய அரசியல் சூழ்நிலையில் எமது சமுதாயம் இதைக்கப்பட இடம் கொடுக்கக் கூடாது என்றும் அவர்கள் கேட்டுக் கொள்கின்றனர். அத்துடன் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் நடைபெறும் வைபவங்களிலும் என்னைச் சந்திப்பவர்கள் இவ்வாறான கோரிக்கைகளையே என்னிடம் விடுக்கின்றனர் என்றார்.

தோட்டத் தொழிலாளருக்கு எட்டு ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். இச்சம்பள உயர்வு புதிய கோரிக்கை அல்ல. அரசாங்கம் ஒத்துக் கொண்ட விடயமாகும். இதனைகூட முறைப்படுத்துமாறே அரசாங்கத்தைக் கோருகின்றோம் என்றார்.

இன்று சம்பள உயர்வு மட்டுமல்ல, நல்லவாழ்க்கைத்தரம் வீடு, காணி, உரிமைபோன்ற பல்வேறு உரிமைகளைப்பெற வேண்டியுள்ளது. இவற்றில் பல விடயங்கள் அரசாங்கத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. இவை அனைத்தும் இப்பொழுது நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய விடயங்கள் ஆகும் எனவும் குறிப்பிட்டார்.

## ஐ.தே.க அலுவலகம் நாசம்

மாகாண சபை அமைச்சர் ஜோன் அமரதுங்காவினால் திறந்து வைக்கப்பட்ட வெலிகம ஐ.தே.க. அலுவலகம் இரவோடு இரவாக ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் அடித்து நொருக்கப்பட்டது.

# பாலியல் வன்முறை புரிந்தவர் பெண்ணின் மகனால் கொலை

**சட்டபூர்வமான செயல் என தீர்ப்பு**

(பாணந்துறை)

தமது தாயாரை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியவரை அடித்துக் கொன்ற மகனின் செயல் நியாயமானது என பாணந்துறை மேலதிக நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

இச்சம்பவத்தில் கொலையுண்டவர் இராணுவத்தை விட்டு ஓடியவர். இவர் வாதுவைப் பகுதியில் ஒரு பிரபல குற்றவாளியுமாவார். ஏற்கனவே பல இளம் பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியவருமாவார் சம்பவதினம் 48 வயதான பெண்மணியொருவரை பாலியல் வன்முறைக்குள்ளாக்கிய போது அப்பெண்ணின் மகனான நிசந்தபீரிஸ் என்பவரால் குகம்பிறி நிசந்தசாக்கொட என்பவரே இச்சம்பவத்தில் அடித்துக் கொலைப் பட்டவராவார்.

இவரது மரண விசாரணையை நடத்திய பாணந்துறை மேலதிகநீதிவான் எவ்.ஆர். பெர்னாண்டோ "ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னைப் பாதுகாக்கும் உரிமை உண்டு நிசந்தபீரிஸ் செய்தது தற்காப்புக்கான கொலையே எனவும் அக்கொலை நியாயமானது எனவும் தீர்ப்பளித்தார்.

## மருந்து தொகுதிகள் அரைப்பகுதி வந்தன

யாழ். போதனா வைத்தியசாலைக்கு இவ்வாண்டின்கான ஆண்டிற்குரிய மருந்துப்பொருட்களின் அரைவாசி தற்சமயம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

எனவே மிகுதி அரைவாசி மருந்துப் பொருட்களும் இங்கு வந்து சேருவதில் ஏதாவது இடர்ப்பாடுகள் இருப்பதாக தெரிவிக்கப்படவில்லை.

ஆகவே இம் மிகுதி மருந்துப் பொருட்களும் அடுத்து வரும் கப்பலில் எடுத்து வரப்படலாம் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

(பா) (தி)

தென்னாபிரிக்காவில்

# வெள்ளையர் நாடு அமைக்க 60,000 'கடவுளின் வீரர்கள்' தயார்

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் வெள்ளையர் நாடு ஒன்றை அமைப்பதற்கான பயிற்சி பெற்ற 60,000 பேரைக் கொண்ட "கடவுளின் வீரர்கள்" படை தம்மிடம் இருப்பதாக நவநாஜித் தலைவர் யூஜின் டேரே பிளாஞ்சே கூறினார்.

"என்னிடம் 60,000 பயிற்சி பெற்ற ஆண்களும் பெண்களும் உள்ளனர். அவசியமானால் அவர்கள் மோதலில் ஈடுபடுவார்கள். அவர்கள் கடவுளின் வீரர்கள் என்றும் கேப்டவுன் நகர மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் அவர் கூறினார்.

பாரா இராணுவ ஆபிரிக்க எதிர்ப்பு இயக்கத் தலைவரான இவர், 'வென் கொமாண்டோ' படை எந்த வெள்ளையர், கறுப்பர் இராணுவத்தையும் தோற்கடிக்கும் நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தலைவர் வில்ஜோயன் தென் ஆபிரிக்காவில் 14 சதவீதப் பகுதியை வெள்ளையர் நாடாக ஆக்கும்படி கோரியதாகவும் ஆனால் மண்டேலா அதை நிராகரித்து விட்டதாகவும் கூறினார்.

ஆனால் நான் 14 சதவீதத்திற்காகச் சண்டையிடமாட்டேன். யுத்தம் வந்தால் சகல பகுதிகளுக்குமாக அது இருக்கும். எங்களை உலகில் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. தற்போதைய பாதுகாப்புப் படையில் மூன்றில் இருபங்கினர் எதிர்கால கறுப்பர் அரசாங்கத்திற்கெதிரான போராட்டங்களில் ஆதரவளிப்பர் என்றும் அவர் கூறினார்.

# புலிகளின் ஊடுருவல் மத்திய அரசு எச்சரிக்கை

**- சுப்பிரமணியம் சுவாமி**

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத்தடுக்கவும், நிலைமையைகட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கவும், தமிழ்நாடு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத்தவறினால் மத்திய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருப்பதாக ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

சேலம் நகரில் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும் கூறுகையில், உள்துறை அமைச்சின் அதிகாரிகள் தமிழ்நாட்டின் பிரதம செயலாளருக்கு இந்த எச்சரிக்கையை விடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# கோபாலசாமி அணியுடன் கூட்டு ஏதும் இல்லை

**ஏ. நல்லசிவம் தெரிவிப்பு**

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தமிழீழம் மூலம் தீர்வு காண முடியாது என்று எனது கட்சி கருதுகிறது இலங்கையின் கட்டுக்கோப்புக்குள் தமிழ் பகுதிகளுக்கு சுயாட்சி வழங்குவதன் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் நாட்டுக் கிளையின் செயலாளர் ஏ. நல்லசிவம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தி.மு.கவிலிருந்து பிரிந்து சென்ற கோபாலசாமியின் தமிழ் ஈழம் பற்றிய நிலைப்பாட்டை தமது கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அதனால் அக்கட்சியுடன் தேர்தல் கூட்டு இருக்காது என்றும் தமிழ் ஈழம், மற்றும் தமிழ் இனவாதம் பற்றிய கோபாலசாமியின் கருத்துக்களை தமது கட்சி வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

## சிந்தனைக்கு

முக்கியமான பிரச்சினைகளில் அரை மனதுக்கும், முழு மனதுக்கும் இடையே எழும் வேறுபாடு, முழுத் தோல்விக்கும் சிறப்பான வெற்றிக்கும் இடையே காணும் வேறுபாட்டிற்கு காரணமாய் அமைகிறது.

- ஆண்ட்ரு யாய்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

# ஆட்சி அமைப்புக்கள் அல்ல அரசியல் வாதிகளே

தேசிய இனங்களின் பிரச்சினைக்கு அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும், அவர்கள் பிரிந்து சென்று தனி அரசவாதற்கு அனுமதி அளிப்பதே ஒரேவழி என்ற முடிவிற்கு உலகம் வந்துகொண்டிருக்கையில், சிறிலங்காவில் உள்ள பௌத்த பேரினவாதிகள் மாகாணசபை அமைப்பும், சமஷ்டி அமைப்பும் பிரச்சினைக்குத் தீர்வாகாது. ஒற்றையாட்சி முறையே பிரச்சினைக்கு தீர்வாகும் எனக் கூறுவது அவர்களின் பேரினவாதச் சிந்தனையில் இருந்து இம்மியளவும் விடுபடவில்லை என்பதையே காட்டுவதாகவுள்ளது.

ஆனால் உலகின் பொதுவான போக்கைப் புறக்கணிக்கும் இவர்கள் உலகிலுள்ள முரண்பாடான போக்கையும், புறநடையான சம்பவங்களையும் உதாரணம் காட்ட முற்படுவது அவர்களின் குதர்க்கத்தனத்தின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும்.

சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினரான தினேஷ் குணவர்த்தனா இவ்வாறான தொருவகையைச் சேர்ந்தவரே. இன்று முன்னாள் யூகோசெலவோகியாவில் நடைபெறும் யுத்தத்தை உதாரணமாகக் காட்ட முற்பட்டுள்ள அவர் 'ஒரே ஆட்சியாக - ஒரே நாடாக விளங்கிய யூகோசெலவோகிய நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஒரே யுத்தமாக இருக்கின்றது. அப்படியானதொரு நிலை எமது நாடுகளில் ஏற்படாது என்பது என்ன நிச்சயம்? எனவேதான் மாகாண சபை முறை வேண்டாம் எனத் திடமாகக் கூறுகிறோம். இதே போன்றதே சமஷ்டி ஆட்சி முறையும், இதுவும் ஒரு நாட்டிற்குள் இன்னொரு நாட்டை உருவாக்கும் செயலாகும்'' எனத் தெரிவித்திருக்கின்றார்.

தினேஷ் குணவர்த்தனா காட்டியுள்ள இவ்வுதாரணமானது முன்னாள் யூகோசெலவோகியாவில் இடம்பெற்று வரும் போருக்கும், சிந்தப்பட்டு வரும் இரத்தத்திற்கும் பிழையானதொரு விளக்கத்தையும், கற்பிதத்தையும் கொடுக்க முற்பட்டுள்ள செயலாகும்.

# மனித உரிமைகளைப் பேணுவதில் சிறிலங்கா அரசு தவறிவிட்டது

## - அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கண்டனம்

சிறிலங்காவின் பாதுகாப்பு படையைச் சேர்ந்த உறுப்பினர்களால் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ள போதிலும் 1993இல் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் எவரும் விசாரணைக்கு உள்ளாக்கப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. இதன்மூலம் வழக்குத் தொடரப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள் என பாதுகாப்புப் படைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இவ்வாறு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் 1993ஆம் ஆண்டில் இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பாக வெளியிட்ட விரிவான அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருக்கும் சில விடயங்கள் வருமாறு;

தனிமையாக தடுப்புக்காவலில் வைத்திருப்பதைத் தடுக்க முடியாததுபோன்றேபெருமளவுக்கு அதிகாரங்களை பாதுகாப்பு படைகளுக்கு வழங்கும் பயங்கரவாத தடைச்சட்டம் போன்றன தொடர்ந்தும் அமுலில் உள்ளன. பலர் 1993இல் தடுத்து வைக்கப்பட்டனர். எனினும் அந்த எண்ணிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை சித்திரவதைக்கு உள்ளாக்குவதும், மோசமாகப் பராமரிக்கப்படுவதும் சிறிலங்கா அரசாங்கத்தால் வழமையாக கையாளப்படுகிறது.

அரசாங்கப் படைகளின் உறுப்பினர்கள் அரசியல் கொலைகளில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர். இவ்வாறான கொலைகளின் மொத்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளன. எனினும் இலக்கின்றிக் கண்மூடித்தனமாக படைபலம் பயன்படுத்தப்படுவதால் யுத்தத்தில் ஈடுபடாதவர்களில் பெரும்பாலானோரின் மரணங்கள் இடம்பெறுகின்றன. எனினும் 1992க்குமுன்னர்நாட்டைஉலுக்கியது போன்றபடுகொலைச் சம்பவங்கள் 1993இல் இடம் பெறவில்லை.

இராணுவத்துடன் இணைந்து செயற்படும் தமிழீழ விடுதலை இயக்கம் எனப்படும் ரெலோ அமைப்பு 1993 ஜனவரியில் ஆயுதம் தரிக்காத இருவரைக் கொலை செய்து தலையை வெட்டியதாக தெரியவந்துள்ளது. கிழக்கு மாகாணத்தின் களுவாஞ்சிக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர்களே இந்த இருவரும் ஆவர் அதே மாதத்தில் காஞ்சிரங்குடாபகுதியில்மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் ஒன்பது

மீதான விசாரணை தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள மட்டக்களப்பிலிருந்து சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பொலநறுவைக்கு மாற்றப்பட்டுள்ளது. சகலரும் தமிழர்களாகவுள்ள சாட்சியங்களை விசாரணைக்கு உட்படுத்த முடியாமல் செய்யவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது. நீதிமன்ற விசாரணைகள் ஒக்டோபரிலும், டிசம்பரிலும் நடைபெற்றன. இதில் தாக்குதலுக்கு பொறுப்பான பல இராணுவ சிப்பாய்கள் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர்.

1983-ம் ஆண்டிலிருந்து இலங்கையில் குறைந்தது 12 000 பேர் காணாமற் போயுள்ளனர். 1987 – 90 காலப் பகுதியிலேயே இவர்களில் பெரும்பாலானோர் காணாமற் போயுள்ளனர். காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 1992-ல் குறைவடைந்தது. 1992-ல் 200 ஆக இருந்த காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 1993-ன் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் 70 ஆகக் குறைவடைந்தது. இவற்றில் பெரும்பாலானவை வடக்கு-கிழக்கு யுத்தப் பகுதிகளிலேயே இடம்பெற்றதுடன் அரசாங்கப் படைகள் மீதே இதற்காக குற்றம் சாட்டப்பட்டது.

உதாரணமாக பெப்பிரவரி 17-ல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தால் 15 பேர் தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அதன் பின்னர் இவர்கள் எவருமே எங்குமே காணப்படவில்லை. மட்டக்களப்பு சமாதானக் குழுவின் தூண்டுதலால் இராணுவம் விசாரணை ஒன்றை ஆரம்பித்ததாகக் கூறப்பட்டது. எனினும் எந்த முன்னேற்றமும் அறிவிக்கப்படவில்லை. ஜூலை 14-ம் திகதி மூன்று தமிழர்கள் மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கைதான பின்னர் காவலில் வைக்கப்பட்டமைக்கு சாட்சிகள் உள்ளன. ஆனால் அதன்பின் அவர்களைக் காணவில்லை. இராணுவத்துடன் இணைந்த

இத்தகைய நிலை ஏற்படுகின்றது.

கைது செய்யப்படுபவர்கள் தடுத்து வைக்கப்படும் போது அவர்கள் பற்றிய அத்தாட்சியை குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும் என அவசரகால சட்டப் பிரமாணங்களில் அண்மையில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் பெருமளவுக்கு மீறப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது இந்த மறுசீரமைப்பை முழுமையாக அமுல் நடத்துவது காணாமல் போனவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைப்பதற்கு உதவும்.

தென்மாகாண நகரமான எம்பிலிப்பிட்டியாவில் 1989 ஆம் ஆண்டில் பாடசாலை மாணவர்களில் 32 பேர் காணாமற் போனமை தொடர்பாக மனித உரிமைகள் பணிக்குழு பத்து இராணுவ சிப்பாய்களை அடையாளம் காட்டியுள்ளது. ஆனால் அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, தன்னுடைய 1993 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் அமைந்திருந்த அகதிமுகாமில் இருந்து 158 தமிழர்கள் காணாமற் போனமை தொடர்பாக மனித உரிமைகள் பணிக்குழு நான்கு இராணுவ அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தியிருந்தது. ஆனால் இவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் அரசாங்கத்தினால் எடுக்கப்படவில்லை.

**1993ம் ஆண்டில் சிறிலங்காவில் மனித உரிமைகளின் நிலைமை தொடர்பாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு அண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கையின் முக்கிய பகுதிகள் இங்கு பிரசுரிக்கப் பட்டுள்ளன.**

கொண்டாலும் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் எதனையுமே செய்யவில்லை. பாதுகாப்புப்படைகளின் பெரும்பாலான உறுப்பினர்கள் சித்திரவதைகள் ஒரு வழமையான விடயமே எனவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே எனவும் குறிப்பிடுகின்றனர்.

பல வழக்குகளில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள், தமது உரிமைகள் மீறப்பட்டிருப்பதாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறு 1990ல் பிரசித்தி பெற்ற வழக்கொன்றில் பற்களைப் பிடுங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு 600 அமெரிக்க டொலர் நட்டஈடு செலுத்த நீதிமன்றமொன்று உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையான வட்டாரங்களின் தகவல்களின்படி தடுப்புக் காவலில் பல கற்பழிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாக பல விவகாரங்கள் புலனாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. ஒரு வழக்கில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாதாரண சட்டத்தின்படி ஒருவரைக் கைது செய்தால் அதற்கான காரணம் கைது செய்யப்படுபவருக்கு அதிகாரிகளால் தெரியப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் 24மணி நேரத்தினுள் நீதிவான் ஒருவர் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவேண்டும். சாதாரண சட்டத்தின்படி தடுத்து வைக்கப்படும் ஒருவர் சில தினங்களுக்குள் நீதிவான் முன் கொண்டு வரப்படுவதே வழமை. நீதிமன்றம் அனுமதி அளித்தால் சந்தேக நபர் ஒருவர் மூன்று மாத காலம்வரை பிணையின்றித் தடுத்து வைக்கப்படலாம்.

1979-ல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டமும் மாதாந்தம் நீடிக்கப்படும் பயங்கரவாத தடைச்சட்டமும், வழமையான தடுப்பு காவல் சட்டங்களிலிருந்து விதிவிலக்கு அளிக்கின்றது; இவை இரண்டும் தடுக்க முடியாத தனிமையில் தடுத்து வைத்திருப்பதற்கான அதிகா

அரசாங்கத்தால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட சட்டவிரோத தமிழ் அமைப்புகள் தமக்கென சொந்தமான தடுப்புக்காவல் வசதிகளை வைத்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இவ்வாறான ஒரு அமைப்பான ஈ.பி.டி.பி. யின் தலைவருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று உயர் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக கடத்திச் சென்றமை, மற்றும் சித்திரவதை என்பன தொடர்பாகவே இதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1993-ம் ஆண்டின் பிற்பகுதியில் அரசாங்கப் பாதுகாப்பு படைகளும் தமிழ் தீவிரவாத அமைப்புக்களும் கொழும்பில் சமாந்தரமான ரகசிய தடுப்புக்காவல் முறை ஒன்றை நடைமுறைப்படுத்தியதாக பல மனித உரிமை கண்காணிப்பாளர்களும் குற்றம் சாட்டினர். ஆகஸ்ட் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட பலர் இலக்கத்தகடு அற்ற வாகனங்களில் இனம் தெரியாத இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். சிலர் பல மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டனர் பலர் உத்தியோகபூர்வமான தடுப்பு முகாம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்படும் முன்பாக சித்திரவதை செய்யப்பட்டனர்.

சாதாரண கிரிமினல் வழக்குகளில் பிரதிவாதிகளைப் பாதுகாக்க பல பாதுகாப்புக்கள் உள்ளது, ஆனால் அவசரகால பிரமாணங்களின் கீழ் அல்லதுபயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். விசாரணைகளில் குறிப்பிடத்தக்க பாதுகாப்புக்கள் இல்லாமல் உள்ளது. மேலும் அவசரகால சட்டப் பிரமாணம், பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் அனைவரும் ஜே.வி.பியினர் அல்லது புலிகளின் உறுப்பினர் என அரசாங்கம் குற்றம் சாட்டுகின்றது.

இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ள சுமார் 2000பேரில் எவ்வளவு பேர் அரசியல் கைதிகள் எனவும், எவ்வளவு

இரத்தத்திற்கும் பிழையானதொரு விளக்கத்தையும், கற்பிதத்தையும் கொடுக்க முற்பட்டுள்ள செயலாகும்.

இன்று யூக்கோசெலவோக்கியாபகுதியில் இரத்தஞ்சிந்தப்படுவதற்குக் காரணம் யூக்கோசெலவோக்கியா நான்காகப் பிரிந்ததல்ல. பிரிந்து செல்ல எண்ணிய இனங்களை சேர்பிய பேரினவாதிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முற்பட்டமையினாலேயே ஆகும்; அதாவது பிரிந்து சென்ற பொஸ்னியாவை சேர்பியா அங்கீகரித்திருந்தால் இன்று யூக்கோ செலவோக்கியாவில் இரத்தம் சிந்த வேண்டி வந்திருக்காது;

சோவியத் யூனியன் என்ற உலகின் முதலாம் தரவல்லரசு சிதையுண்டு 15 தேசிய இன அரசுகள் உருவான போது ரஷ்யா அவற்றை அங்கீகரித்ததினால் அங்கு இரத்தம் [சிந்தப்படாமல்] போனது நிகழ்காலஉண்மை. இதேபோன்று செக்கோசெலவோக்கிய சமாதான அடிப்படையில் இரண்டாகப் பிளவுபட்ட போது ஒருதுளி இரத்தமும் சிந்தாமல் இரு அரசுகள் உலகில் உருவாகியமை சிறப்பான எடுத்துக்காட்டு.

மாறாகப் பேரினவாதிகளும், சியோனிஸ்ட்டுக்களும் மற்றைய இனங்களின் தாயகத்தை ஆக்கிரமித்தபோதும் அவர்களின் உரிமைகளை வழங்க மறுத்த போதுமே இனங்கள் இரத்தம் சிந்துகின்றன. இதுவே சிறிலங்காவில் இருந்து பலஸ்தீனம் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது; சிறுபான்மை மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்ட எப்பகுதியிலும் உரிமைக்காக இரத்தம் சிந்தப்படுகின்றது என்பதை தினேஷ் குணவர்த்தனா போன்றவர்களால் உதாரணம் காட்ட முடியுமா?

ஒரு பிரதேசத்தில் இரத்தம் சிந்துவதற்கு அப்பிரதேசத்தில் இருக்கும் ஆட்சி அமைப்பு முறை காரணமல்ல. அது ஒற்றையாட்சியாக இருந்தால் என்ன சமஷ்டி ஆட்சியாக இருந்தாலென்ன கூட்டாட்சியாக இருந்தால் என்ன உரிமைக்காக இரத்தம் சிந்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமானால் தேசிய இன மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்: அவர்கள் சம அந்தஸ்துடனும், பூரண பாதுகாப்புடனும் வாழ வழிவகுக்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து ஆட்சி அமைப்பு முறையால் எதுவும் முழுமையாக தீர்மானிக்கப்படுவதில்லை. அதிகாரத்தில் உள்ள பெரும்பான்மை இனங்களின் நடத்தைகளே பிரச்சினைக்குக் காரணமாகின்றன; இன்று, சமஷ்டி அமைப்பு நிலவிய யூக்கோ செலவோக்கியாவிலும், இந்தியாவிலும், ஒற்றையாட்சி அமைப்பு நிலவும் இஸ்ரேலிலும், சிறிலங்காவிலும் பெருமளவில் இரத்தம் சிந்தப்படுவதற்கு பெரும்பான்மை இனங்களின் ஆதிக்க வெறியே காரணம் ஆட்சி அமைப்பு முறைகளல்ல; ஏனெனில், இவ் அரசியல் அமைப்பு முறையைஉருவாக்கியவர்களே இப்பேரினவாதிகள் தான். இதனை அவர்களால் அழித்து விடவும் முடியும். ஆனால் அதற்கு அவர்களின் பேரினவாதச் சிந்தனை மாற வேண்டும்,

காஞ்சிரங்குடாபகுதியில்மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூர் பிரஜைகள் குழுத்தலைவர் ஒருவர் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஜூலைமாதத்தில், பத்திரிகை செய்திகள் தெரிவித்தன. பாதுகாப்பு படைகளின் காவலில் இருக்கும் போது குறைந்தது பத்துப் பேர் மரணமடைந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் விசாரணைகளின் போது மோசமான முறையில் நடாத்தப்பட்டதாலேயே மரணமடைந்துள்ளனர். உதாரணமாக ஜூலை மாதம் தென்பகுதி காலி மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட ஒருவர் பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் போது காயங்கள் காரணமாக மரணமடைந்துள்ளார்.

இதே போன்ற மற்றுமொரு சம்பவம் அதையடுத்துள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏப்ரல் மாதத்தில் நடைபெற்றது. ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவரது சடலம் கொழும்புக்கு வடக்கே இருபது மைல் தொலைவிலுள்ள கடற்கரையோர நகரமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டது. இவர் கொழும்பில் சுற்றிவளைப்பு தேடுதலின் போது கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்ட விரோத கொலைகளில குற்றம் சாட்டப்படும் பாதுகாப்புப்படை உறுப்பினர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர் என அரசாங்கம் திரும்பத் திரும்ப கூறிய போதிலும் கூட அவர்களை விசாரணைக்கு உள்ளாக்கும் முயற்சிகள் அப்படியே தான் உள்ளன.

மைலந்தனை கிராமத்தில் 1992ல் 35 தமிழ்ப்பொது மக்களை படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 23 இராணுவச் சிப்பாய்கள் உள்ளன. ஆனால் அதன்பின் அவர்களைக் காணவில்லை. இராணுவத்துடன் இணைந்து செயற்படும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான மற்றுமொரு அமைப்பான புளொட் வட பகுதியின் வவுனியா மாவட்டத்தில் பலர் காணாமற்போனமைக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

வடமத்திய மாகாணத்திலுள்ள பொலநறுவை மாவட்டத்தில்கூட காணாமல்போனவர்கள் தொடர்பான நம்பகத் தகவல்கள் உள்ளன. இத்தகைய 15 வரையிலான காணாமற்போன சம்பவங்களுக்கு உள்ளூர் பொலிசாரே காரணம் என்று சாட்சிகள் கூறுகின்றன.

தடைமுகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களைத் தடையின்றிப் பார்வையிட செஞ்சிலுவைச்சங்கத்தின் சர்வதேச குழுவுக்கு (ஐ. சி. ஆர். சி) அனுமதி வழங்குவது என்று அரசாங்கம் 1989 இல் முடிவு செய்திருந்தது. பாதுகாப்புப் படைகளின் கைகளில் சிக்கி காணாமற்போனவர்களின் எண்ணிக்கையை குறைப்பதில் இது பெரும் பங்காற்றியுள்ளது. அதே போல அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் பணிக் குழுவும் பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகால சட்டம்போன்றவற்றின் கீழ் தடுத்து வைக்கப்பட்டோரின் நலன்களைக் கண்காணிக்க உதவி வருகிறது எனினும் கொழும்புக்கு வெளியே மனித உரிமைகள் பணிக்குழுவின் கள உத்தியோகத்தர்கள் வளங்கள் பற்றாக்குறையாக உள்ளமையினாலும், பாதுகாப்புப் படைகளுடனான தொடர்புகளை கையாள்வதில் இருக்கும் சிரமங்கள் காரணமாகவும் தமது நடவடிக்கைகளில் தடுக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படைகள் அரசாங்கத்தின் சில உத்தரவுகளைக் கடைப்பிடிப்பதற்கு தவறுவதனாலேயே

**இங்கு பிரசுரிக்கப் பட்டுள்ளன.**

1991 ஜனவரிக்குப் பின்னர் காணாமற்போனமை, கடத்தப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அதனுடைய பணிக்குப் போதுமானதல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது இதனுடைய பரிசீலனைக்கு வந்த 873 விடயங்களில் 38 விவகாரங்களை மட்டுமே இது பூர்த்தி செய்தது. இவற்றில் இரண்டு சட்டமா அதிபரிடம் மேல்விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டது. எனினும் எதுவும் விசாரணைக்கு வரவில்லை. 1993 மத்திய பகுதியில் இந்த ஆணைக்குழுவின் பணி மாற்றி அமைக்கப்பட்டு காணாமற் போனவர்களின் விவகாரங்கள் விசாரணைக்கு உட்படுத்தப் டும் நடைமுறைகளை விரைவுபடுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இப்புதிய மாற்றத்தின்படி கடத்தல் அல்லது காணாமற் போதல் தொடர்பான ஒரு புகார் நம்பகரமானதா இல்லையா என்பதை இக்குழு தீர்மானிக்கும். இதையடுத்து விவகாரத்தை விசாரணைக்கு உட்படுத்துவதா புலனாய்வுக்கு விடுவதா என்பது பற்றி முடிவு செய்ய ஜனாதிபதியிடம் அனுப்பப்படும்.

1993-ம் ஆண்டு காலப் பகுதியில் விசாரணைகளின் போது தடுப்புக்காவல் கைதிகள் மீது சித்திரவதைகளும் மோசமான முறையில் நடாத்துதலும் ஒரு வழமையான அம்சமாகவே காணப்பட்டது கிரிமினல் சந்தேகநபர்களும், அவசர கால பிரமாணங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரும் அவர்களது தடுப்புக் காவலின் ஆரம்ப கட்டத்தில் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

சித்திரவதைகள் ஒரு பொதுவான விடயம் என்பதை அரசாங்க அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஒப்புக்

இவை இரண்டும் தடுக்க முடியாத தனிமையில் தடுத்து வைத்திருப்பதற்கான அதிகாரத்தைக் கொடுத்துள்ளன. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒருவர் குற்றச்சாட்டு எதுவும் தெரிவிக்கப்படாமல் 18 மாதங்கள் வரை தடுத்து வைக்கப்படலாம். எனினும் அதற்கும் அதிகமான காலம் தடுத்து வைக்கப்பட்டதான வழக்குகள் அதிகம் இருக்கின்றன. பெரும்பாலான கைதிகள் இப்போது பயங்கரவாத தடைச் சட்டத்தைவிட அவசரகால சட்டத்தின் கீழ்தான் அதிகளவில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

அவசரகால சட்டப் பிரமாணங்களின் கீழ் பாதுகாப்பு செயலரால் ஒப்பமிடப்படும் பட்சத்தில் ஒருவர் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட முடியும். இந்தப் பிரமாணங்களில் சில மாற்றம் செய்யப்பட்டபோதும் கூட பெரும்பாலும் முன்னைய நிலைதான் தொடர்கின்றது.

அடையாளம் தெரியாத இடங்களில் தனிமையான முறையில் அரசாங்க பாதுகாப்புப் படைகளால் மக்கள் தடுத்து வைக்கப்படுவது தொடர்பான செய்திகள் தொடர்ந்தும் வெளியாகின்றது இவ்வாறு மாதக் கணக்கில்- வருடக்கணக்கில் கூட பலர் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

பட்டுள்ள சுமார் 2000பேரில் எவ்வளவு பேர் அரசியல் கைதிகள் எனவும், எவ்வளவு பேர் பயங்கரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதையும் வரையறுப்பது சாத்தியமானதல்ல.

இன்னும் தனிப்பட்டவர்கள் ரகசியத்தைப் பாதுகாப்பதையும் குடும்பம் மற்றும் வீட்டின் புனிதத் தன்மையையும் அரசாங்கம் பொதுவாக மதிக்க வேண்டும். வழமையான சட்டத்தின் கீழ் தனிப்பட்ட இடங்களுள் பிரவேசிக்க அல்லது தேடுதலுக்கு நீதிபதி ஒருவரின் வாரண்ட் அங்கீகாரம் தேவை. ஆனால் அவசரகால சட்டப் பிரமாணமும், பயங்கரவாத தடைச் சட்டமும் எந்த இடத்தையும் எந்த வாகனத்தையும் சோதனையிடவும் அனுமதி வழங்குகின்றது

தெரிவு செய்யப்பட்ட அடிப்படையில் தொலைபேசி உரையாடல்களையும் ஏனைய தொடர்புகளையும் அரசாங்கம் கண்காணிக்கின்றது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு அனுப்பப்படும் கடிதங்கள் கூட உடைக்கப்பட்டு நாணய நோட்டுகள் அபகரிக்கப்படுகின்றன இத்தகைய செயற்பாடுகள் தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கையில்நியாயமற்ற தலையீடுகள் ஆகும்.

# புலிகள் தாக்குதலையடுத்து மணலாறுபடையினர்சிரமம்

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினர் சிரமப்பட்டு வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது

கடந்த மூன்றாம் திகதிநள்ளிரவு வேளையில் இத்தாக்குதலை விடுதலைப்புலிகள் மேற்கொண்டதாகவும், இதனைத்தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினர் பலத்தஎறிகணைத் தாக்குதல்களை தொடுத்ததுடன் விமானத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஜெனிவா மாநாட்டில் கொண்டுவரப்படவுள்ள

# சமஷ்டித் தீர்மானத்திற்கு எதிராக சிறிலங்கா ஆதரவுபெற முயற்சி

ஜெனிவாவில் நடைபெற வுள்ள ஐ. நா. மனித உரிமைகள் மாநாட்டில் தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்படவுள்ள சமஷ்டிக் கோரிக்கைக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்கு சிறிலங்காவின் தூதுக்குழு முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றது. சட்டமா அதிபரின் தலைமையில் சென்றுள்ள இத் தூதுக்குழு இப் பிரச்சினை சம்பந்தமாகப் பல உலக நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசி வருகின்றது. மேற்படி தகவல்களை ''சண்டேரைம்ஸ்'' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

மேலும் அச்செய்தியில், சில மேற்கு நாடுகளின் மனித உரிமை ஸ்தாபனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்படி மாநாட்டில் சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்கவுள்ளன அத்துடன் வடக்குக் கிழக்கைப் பிரிப்பது சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்ற சிறிலங்கா இந்திய ஒப்பந்தத்திற்கும் இந் நிறுவனங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவுள்ளன.

இதனால் மேற்படி நிறுவனங்களினதும், உலக நாடுகளினதும் பிரதிநிதிகளுடன் சிறிலங்கா தூதுக்குழு தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

சுஹணை

கள் மக்களற்ற பகுதிகளாக உள்ளன. குச்சவெளி இராணுவ முகாமருகே 10 தமிழ் கிராமங்கள் பலாத்காரமாக குடியேற்றப்பட்டன. முஸ்லிம் குடும்பங்கள் பலவும் குடியமர்த்தப்பட்டன. சிங்கள குடும்பங்களும் குடியேற்றப் பட்டுள்ளன.

திருமலைநகருக்கு வெளியே மட்டும் 115 ராணுவ முகாம்களுக்குமேல் உள்ளன. திருமலை எல்லைப்பகுதியான பன்குளம் முழுமையாக சிங்களவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

---

மீனவர்

திருகோணமலையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் இராணுவத்தினரினால் எறிகணை ஒன்று ஏவப்பட்டது. அது வீழ்ந்து வெடித்தவுடன் அந்த இரண்டு இளைஞர்களும் வீதிவழியாக கோட்டைச்சந்தியை நோக்கி ஓடியபோது மற்றொரு எறிகணை அவர்களை அண்மித்து வீழ்ந்து வெடித்தது. அதில் மேற்படி இளைஞர் கொல்லப்பட்டார் மற்றவர் படுகாயமடைந்தார். மேலும் அக்கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேறு ஒருவரும் படுகாயமடைந்தார் என தெரிவிக்கப்பட்டது. (பா,தி)

---

வாடிக்கை

விட்டு மரணமடைய நேர்ந்தால் அவர்களின் பின்னுரித்தாளர் பணத்தை மீளப் பெறுவதில் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். மேலும் வங்கியிலிருந்து பெறக்கூடிய நன்மைகள் குறித்து ஆலோசனைகளைசம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும் இச் சங்கம் உதவிகளைப் புரியவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

---

வலிவடக்கு

படையினர் தொண்டமனாறு பகுதிகள் மீது கடுமையான முறையில் பீரங்கித் தாக்குதலைமேற்கொண்டன

அதேசமயம் நேற்று பகல் இரண்டு பொம்பர்கள் வலிகாமம் வடக்கு தொண்டமனாறு மற்றும் உடுப்பிட்டி குடியிருப்புக்கள் மீது பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டவாறு இருந்தன.

மற்றும் பலாலி விமானத்தளத்திற்கு அவ்ரோ விமானம் அடிக்கடி வந்து தரையிறங்கி திரும்பிச் சென்றதையும் அவதானிக்க முடிந்தது. (யோ)

---

முஸ்லிம்

மேற்கொள்வதினால் இங்கு மக்கள் சுதந்திரமாக செயல்பட முடியாத ஓர் இக்கட்டான நிலை இருப்பதையும் குறிப்பாக சிறுபான்மை மக்கள் மீது தொடர்ந்து அரச பயங்கரவாதம் மூலம் ஆட்சி செய்கின்றது எனவும் அம்மனுவில் குறிப்பிட இருப்பதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

வீரச்சாவு



பிறப்பு:

22 - 10 - 1969

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 5- 3- 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1105

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

26-2125, 24-6475, 27-4920, 24-9489, 26-4393, 26-0403, 26-0483, 42-1623, 28-1686, 26 6461, 24-4854, 27-1939, 24-9490, 24-9744, 24-5461, 24-1250, 24-7360, 24-1040, 24-6280,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

27-9090, 27-1292, 42-7297, 26-8600, 27-5775, 22-3306, 42-3399, 26-8810, 26-0547, 24-7081, 28-6624, 22-4895, 26-7627, 42-1293, 43-4170, 27-2099, 24-6316, 27-2088,

### 6- 3- 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:-1108

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:-

28-1168, 26-6775, 24-5709, 42-1754, 41-9659, 27-5121, 27-9105, 26-1609, 22-5812, 22-6468, 40-4484, 26-4323, 26-1919, 24-9596, 27-9773, 27-5186, 28-6263, 28-0523, 24-5390, 24-8374.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:-

28-5484, 27-2016, 26-5725, 28-9259, 42-1969, 42-6511, 28-3429, 43-2524, 24-6448, 24-8391, 26-2150, 26-1852, 42-1750, 42-849, 41-9895, 41-7563, 26-2786, 24-8631, 24-4992, 26-3741, 42-3329, 26-2070, 42-3815.

---

செஞ்சோலை மகளிர் பாடசாலை

# தடகளப் போட்டியில் மஞ்சள் இல்லம் முதலிடம்

(நமது நிருபர்)

யாழ்செஞ்சோலை மகளிர் பாடசாலை வருடாந்த இல்லத் தடகள விளையாட்டுப் போட்டி யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகியது.

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன்போது ஈகைச் சுடரை விடுதலைப் புலிகள் மகளிர் படைத்தளபதி செல்வி விதுஷா தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்தமிழீழத் தேசியக் கொடியை விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதியும் பாடசாலைக் கொடியை செஞ்சோலை அமைப்பாளர் செல்வி ஜனனியும் ஏற்றி வைத்தனர்.

செஞ்சோலை மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி ஏற்றுக் கொண்டார். ஒலிம்பிக் தீபத்தை செஞ்சோலை மாணவர்கள் ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஊதா இல்லம், பச்சை இல்லம், மஞ்சள் இல்லம் ஆகிய மூன்று இல்லங்கள் தடகள விளையாட்டுப் போட்டியில் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் பரிசாக வழங்கப்பட்டன. இதில் மஞ்சள் இல்லம், பச்சை இல்லம், ஊதா இல்லம் ஆகியன முறையே 256, 246, 187 புள்ளிகளைப் பெற்று முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைத் தட்டிக் கொண்டன.

## வகுப்புகள்

வடமராட்சி)

தொலைக்கல்வி பயிலுனர் ஆசிரியர் இரண்டாம்வருட மாணவர் வகுப்புகள் எதிர் வரும் சனி, ஞாயிறு தினங்களில் வட இந்து மகளிர் கல்லூரியில் காலை நடைபெறவுள்ளது. (யோ)

---

லெப்.

வகுப்பு மரியாதைகளுடன் கோண்டாவில் அரசியல்துறை செயலகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு செயலகத்தைச் சேர்ந்தோரின் அஞ்சலி நிறைவுற்றதும் மாலை 4.00 மணியளவில் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரர் நினைவுக் கல் நாட்டப்படும்

---

நேர்மையான

வாக தெரிகின்றது. யுத்தம் இல்லாத ஒரு தீர்வு அவர்களின் விருப்பம் அதாவது எமக்குத்தேவை நேர்மையான உண்மையான ஒரு தீர்வுதான் என தெளிவாககூறினார்கள்.

அதாவது பரஸ்பரம் இருதரப்பினரும் பேச்சுக்களை நடத்துவதன்மூலம் மட்டுமே இதனைத் தீர்க்க முடியும்.

அவர் எந்தவொரு ஒலிப் பதிவு நாடாவையும் எனக்குத் தரவில்லை நானும் திரு. கரிகாலனும் பேசிய பேச்சுக்களை நான் ஒலிப்பதிவுசெய்து கொண்டேனேதவிர வேறு ஒன்றும் இல்லை. இதனை

---

# புகலிடம் கோருவோரில் இலங்கையரே அதிகம்

1993ஆம் ஆண்டில் 14,101 பேருக்கு மட்டுமே கனடா அகதி அந்தஸ்து வழங்கியுள்ளது.

1992ஆம் ஆண்டில் 17435 பேருக்கும், 1991இல் 19427 பேருக்கும் கனடாவில் புகலிடம் அளிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக கனடா வரும்அகதிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த கடந்த வருடம் புதிய சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது.

1993இல், அதிகமான அகதிகள் இலங்கையில் இருந்தே பிரவேசித்தனர்.

---

## மரண அறிவித்தல்கள்

### இராசையா அன்னம்மா

(2-ம் வட்டாரம் புங்குடுதீவு)

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது 27/1, பொன்னப்பாலேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமாகிய இராசையா அன்னம்மா (6-3-94) நேற்று காலமாகிவிட்டார். அன்னார் இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகநாதன் வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றகோகிலார், பார்வதியின் மருமகளும், இராசலட்சுமி (லண்டன்), நாகராசா (கனடா), தங்கலட்சுமி, அன்னலட்சுமி, சொர்ணலட்சுமி (கனடா), சுந்தரலிங்கம் (ஆசிரியர் யாழ்/இந்துக்கல்லூரி), தியாகலிங்கம் (கிராம அலுவலர், உருத்திரபுரம்), விஜயலட்சுமி, பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தியாகராசா (ஆசிரியர்), இராஜேஸ்வரி (கனடா), கனகரட்ணம், துரைசிங்கம், நடேசபிள்ளை (கனடா), ரதினி, பிறேமாவதி (ஆசிரியை உருத்திரபுரம் ம.வி), விஸ்வலிங்கம் (சுவிஸ்), ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கந்தையா. காலஞ்சென்றவர்களான சின்னம்மா, நாகலிங்கம், சின்னத்தாய், சின்னப்பிள்ளை, முத்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (7-3-94) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு 27/1, பொன்னப்பாலேன் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

27/1 பொன்னப்பா லேன் இ. சுந்தரலிங்கம்
வண்ணார்பண்ணை, (மகன்)
யாழ்ப்பாணம். (7676)

### திரு சின்னத்தம்பி கந்தர்

### (ஆசிரியர்)

மறவன்புலோவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சி. கந்தர் (6-3-94) ஞாயிற்றுக்கிழமை மு. ப. 11-00மணியளவில்காலமானார். இவர் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி பரமேஸ்வரி சுந்தர



பிறப்பு:

22 - 10 - 1969

வீரச்சாவு:

1 - 3 - 1994

## லெப். மயூரன்

(சண்முகராஜா செந்தில்ராஜ்)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
யாழ். தொழில்நுட்பக் கல்லூரி

பழைய மாணவராவார்.

கரம்பன் ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் கெற்பலி மிருசுவில், பாண்டியன் தாழ்வு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட சண்முகராஜா செந்தில்ராஜ் 01-03-1994 அன்று பூநகரி கௌதாரி முனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடமாட்டத்தை அவதானிக்கச் சென்றபோது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட திடீர் நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

அன்னார் சண்முகராஜா, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் மோகனராஜ் (யாழ். தபாலகம்), (நியூ ஹப்பிரெக்ஸ் யாழ்ப்பாணம்), ஜெயராஜ் (சுவிற்சர்லாந்து), சுபாங்கினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சத்தியமாலா, ஜெனோவா மேரி ஆகியோரின் மைத்துனரும், ஹவித்திரா, சகீசன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரது உருவப்படம் இன்று (7-3-94) பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

63, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு பேக்கரி அருகாமை,
யாழ்ப்பாணம்.

(7671)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்தில் உள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

27-5186, 28-6263, 28-0523, 24-5390, 24-8374.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:-

28-5484, 27-2016, 26-5725, 28-9259, 42-1969, 42-6511, 28-3429, 43-2524, 24-6448, 24-8391, 26-2150, 26-1852, 42-1750, 42-849, 41-9895, 41-7563, 26-2786, 24-8631, 24-4992, 26-3741, 42-3329, 26-2070, 42-3815.

## கணக்காய்வாளர் தேவை

முன் அனுபவமுள்ள கணக்குப் பதிவாளர் உடன் தேவை. ஆங்கில அறிவு அவசியம், வயதெல்லை 40-50 றிற்கும் இடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

விளம்பர இல. 317
மே பா. ஈழநாதம்
யாழ்ப்பாணம்

(7674)

## நன்றி கூறுகின்றோம்

6-3-94-ல் நடைபெற்ற வடபிராந்திய யாழ். ஆங்கில மருத்துவ சங்கத்தினரின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில்,

அக்கடமி ஒவ் ஒறியன்ரல்
மார்ஷல் ஆட்ஸ் சோட்டோகான்

கராட்டி கழகத்தினராகிய எம்மை அழைத்து கௌரவித்தமைக்காக ஆங்கில மருத்துவ வர்த்தகசங்கத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அக்கடமி ஒவ் ஒறியன்ரல்
மார்ஷல் ஆட்ஸ் சோட்டோகான்
கராட்டி கழகத்தினர்

(7673)

## மாபெரும் நாடக விழா
### பிற்போடப்பட்டுள்ளது

பொலிகண்டி அ. மி. த. க. பாடசாலை அபிவிருத்தி நிதிக்காக எம்மால் இன்று நடாத்தப்பட விருந்த 'நாடக விழா' தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 13. 3. 94 (ஞாயிற்றுக் கிழமை) அன்று பிற்போடப்பட்டுள்ளது என்பதனை நாடக ரசிகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்

மேற்படி பாடசாலை
பழைய மாணவர் சங்கம்

(7678)

...பரப்பவும் பேச்சுக்களை நடத்துவதன்மூலம் மட்டுமே இதனைத் தீர்க்க முடியும்.

அவர் எந்தவொரு ஒலிப்பதிவு நாடாவையும் எனக்குத் தரவில்லை நானும் திரு. கரிகாலனும் பேசிய பேச்சுக்களை நான் ஒலிப்பதிவுசெய்து கொண்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதனை தவறாக சிலர் வெளியிட்டமைதான் எனக்குக் கவலை தருகின்றது.

அவர் கூறியதை அப்படியே ஜனாதிபதிக்கு எழுதிக் கொடுத்தேன். இவை மட்டுமே நடந்தது என்றார்.

நான் எண்ணுகின்றேன் கரிகாலன் விடுத்தவேண்டுகோள் திரு. பிரபாகரனினால் விடுக்கப்பட்ட அழைப்பு என்று எனவே இது திரு. பிரபாகரனின் விருப்பம் இல்லையென சிலர் தட்டிக்கழிக்கக்கூடாது என்றார்.

சிறப்பு

ஈடுபட்டுள்ளனர்.

பல வைத்தியர்கள் வசதிக்காகவும் உல்லாசத்திற்காகவும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இதனால் நோயாளர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் பல்வேறு நோய்களை கண்டறிந்து குணப்படுத்துவதற்கான வைத்தியர்கள் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவுகிறது.

இங்கு வந்து சேவையாற்ற விரும்பும் சிறப்பு வைத்தியர்களை அனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் தயார் என்று சொல்கிறது. ஆனால் வைத்தியர்கள் தான் இங்கு வந்து சேவை புரிய தயங்குகிறார்கள் என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

சமீபத்தில் புற்றுநோய்க்கான சிறப்பு வைத்தியர் பிள்ளையை யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடையிடையே வந்து சேவையாற்றும்படி கேட்கப்பட்டபோதிலும் அவர் இங்கு வருவதற்கு மறுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சிறப்பு வைத்தியர் யாழ்ப்பாணம் வந்து சேவையாற்ற விரும்பின் அனுமதி வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(தி), (பா)

## திரு சின்னத்தம்பி கந்தர்
(ஆசிரியர்)

மறவன்புலோவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சி. கந்தர் (6-3-94) ஞாயிற்றுக்கிழமை மு. ப. 11-00 மணியளவில் காலமானார். இவர் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி பரமேஸ்வரி சுந்தரகாந்தன் (ஓய்வு பெற்ற திட்டம் செயற்படுத்தல் உத்தியோகத்தர்), திரு. க. கணேசலிங்கம் (ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் கனடா), செல்வி சிவலோகநாயகி கந்தர் (ஆசிரியை கொழும்பு), திருமதி கலைவாணி குணசிங்கம், செல்வி யோகேஸ்வரி கந்தர், செல்வன் க. சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. க. சுந்தரகாந்தன் (உப அதிபர் யா. முத்துத்தம்பி வி., திருநெல்வேலி) திருமதி இராஜலட்சுமி கணேசலிங்கம் (கனடா), திரு. க. குணசிங்கம் (உப்புக் கூட்டுத் தாபனம்) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் மறவன்புலோ மணற்காடு மயானத்தில் (07-03-94) இன்று திங்கட்கிழமை மு. ப. 12-00 மணிக்கு இடம்பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. குணசிங்கம்

(7677)

## திருமதி கதிரவேலு சிவநிதி
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கதிரவேலு சிவநிதி அவர்கள் (05-03-94) சனிக்கிழமை காலமானார். அன்னார் கதிரவேலுவின் அன்பு மனைவியும், வாசவன் (ஆங்கில ஆசிரியர் C.C.T.M.S வவுனியா), கேசவன் ஆகியோரின் அருமைத் தாயாரும், ராஜியின் அன்பு மாமியாரும், சிவானந்தன் (நோர்வே), நடராசா (முகாமையாளர் சிங்கர் கொம்பனி வவுனியா), காலஞ்சென்ற செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தூயோனின் ஆசை அப்பம்மாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07-03-94) திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கதிரவேலு
(கணவன்)

வேதக்கோவில் அருகாமை
கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

(7672)